
# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

● சித்திரை - 2023



# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

சித்திரை - 2023

படைப்புக்கள் அனுப்ப :

Neythal34@gmail.com

Mahendran54@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- அட்டை ஓவியம் : muhammed sajid
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :

R.Mahendran,
34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk

- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்

- R.Mahendran,

A/C No: 90759821
Sort.Code: 20-67-88,
SWIFTBIC BUKBGB22
IBAN GB80 BUKB 2067 8890 7598 21
BARCLAYS BANK (PLAISTOW BRANCH)

# படைப்பாளர்கள்:

**கவிதைகள்:**

1. கண்ணன் விஷ்வகாந்தி(கண்ணன்)
2. சந்திரா மனோகரன்
3. ரகுநாத் வ- மதுரை
4. கோபால்தாசன்
5. DR. ஜலீலா முஸம்மில். ஏறாவூர்
6. சங்கர சுப்பிரமணியன்
7. இரா. மதிராஜ்
8. பா. சிவகுமார்
9. மு. ஆறுமுகவிக்னேஷ்
10. கா. ந. கல்யாணசுந்தரம்
11. கோவை. நா. கி. பிரசாத்
12. மு தனஞ்செழியன்
13. செ. புனிதஜோதி
14. ஆரூர். சிவ. மணிவேல்
15. வில்லரசன்
16. பாரியன்பன் நாகராஜன்
17. பேராசிரியர் மு விஜயகுமார்

**சிறுகதைகள்:**

18. வாசுகி. நடேசன்
19. கவிஜி
20. திக்குவல்லை கமால். ( இலங்கை )
21. யாழ் எஸ் ராகவன்

**கட்டுரைகள்:**

22. இளையவன் சிவா
23. சிறீ சிறீஸ்கந்தராசா
24. நௌஷாத் கான் லி-அபுதாபி

வாசுகி. நடேசன்

# திருக்குறட் கதைகள்

தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றும்

துன்னற்க தீவினைப் பால்.

ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் தமது தந்தைவழி கிடைத்த நிலத்தில் ஒரு சிறு குடில் அமைத்து வாழ்ந்துவந்தார்.

சிறுகுடிலைச் சுற்றி இருந்த பெருநிலப் பரப்பில் இயற்கை விவசாயம் செய்து வந்தார்.

விவசாயம் செய்யவும் உணவாக்கவும் பயன்படுத்தும் மிக அத்தியாவசியமான பொருட்களைத்தவிர வேறு எந்தப் பொருட்களையும் அவர் கொண்டிருக்கவில்லை. ஆடை கூட இரண்டு மட்டுமே அவரிடம் இருந்தது.

விவசாயத்தில் வரும் தானியங்கள் ,காய்பிஞ்சுகள், பழங்கள் என்பவற்றில் தமக்கு உயிர்வாழ்வதற்காகச் சிறிது எடுத்துக் கொண்டு மற்றவற்றை தமது ஊரிலுள்ள பாடசாலை மாணவருக்கு மதிய உணவு வழங்குவதற்கு வழங்கி விடுவார். அதனால் ஏழைமாணவர்களோடு அனைத்துமாணவரும் ஆரோக்கியமான உணவைப் பெற முடிந்தது.

மாலை நேரங்களில் இரண்டு மணி நேரம் நடையாக ஊரைச் சுற்றிவருவார். இரவு வேளைகளில் தம்மை நாடிவருவோரின் தேவைகளை அறிந்து அவர்களுக்குக் கல்வி வழங்கியும் சமையத்தில் நல்லவழிகாட்டியும் வந்தார். அவர்கள் போன பின்பு சிறிது நேரம் நூலகத்தில் தாம் எடுத்துவரும் புத்தகம் ஒன்றை வாசித்து விட்டு படுக்கைக்குச் செல்லுவார். இவை மாறாத இவரது அன்றாட செயல்களாக இருந்தன.

இவர் இறை வழிபாட்டில் ஈடுபட்டதையோ ,தமது கடவுட் கொள்கை இதுதான் எனக்கூறியதையோ எவரும் பார்க்கவில்லை… கேட்டதில்லை. இவரும் காவி அணிந்ததுமில்லை. தம்மைத் துறவி என்று கூறியதுமில்லை.

ஆனாலும்… அவரது நடத்தையைப் பார்த்த பொதுமக்கள் அவரைச் சாமியார் என்றே அழைத்தனர்.

ஒருநாள் ஒரு கள்வன் இவரது தோட்டத்தில் காய்பிஞ்சுகளைக் களவாடிக்கொண்டிருந்தான். அதனை அவ்வழியால் சென்ற ஊரவர் ஒருவர் கண்டுவிட்டார். அவர் கூச்சலிடவே ஊரவர் பலர் அங்கு கூடிவிட்டார்கள். ஊருக்கே நன்மை செய்யும் சாமியாரிடம் களவாட வந்த அந்தக் கள்வன்மீது அவர்களுக்கு அடங்காத கோபம்



வந்தது. அவனை நையப் புடைத்துவிடத் துடித்தார்கள். கள்வன் மீது ஓரிரு அடிகளும் விழுந்துவிட்டன. அவன் நோத்தாங்காது ஓவென கதறியழுதான். குடிலில் புத்தகம் ஒன்றில் ஆழ்ந்திருந்த சாமியார் சத்தம் கேட்டு அங்கே விரைவாக வந்தார். கள்வனை மக்களிடமிருந்து விலக்கி நடந்தவற்றைக் கேட்டு அறிந்து கொண்டார். தாமே அவனைப் பார்த்துக் கொள்வதாக கூறிவிட்டு அவனைத் தமது குடிலுக்குள் அழைத்துச் சென்றார்.

சாமியார் அவனிடம் எதுவும் கேட்கவில்லை. கள்வனுக்கு அடிபலமாகப் பட்டவிடங்களில் வீக்கம் கண்டிருந்தது. மண் சிறிதளவு எடுத்து வறுத்து வீக்கமுள்ள இடங்களுக்கு ஒத்தனம் கொடுத்தார் சாமியர். அவரது கனிந்த பார்வை கள்வனை ஏதோ செய்தது. அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

“ஐ யா! உங்களைப் பார்க்க நல்லவர் போல் தெரிகிறது. நான் பேராசையால் களவெடுக்க வந்தேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இனி நான் இவ்வாறு நடந்து கொள்ள மாட்டேன். வெளியில் சென்றால் மக்கள் என்னை அடித்தே கொன்று விடுவார்கள் தயவுசெய்து நான் இன்றிரவு உங்களிடமே இருந்து விட்டு நிலமை சாதகமாக இருக்கும் போது இங்கிருந்து போய்விடுகிறேன். ” கள்வன் சாமியாரிடம் பணிவோடு வேண்டினான்.

“அதற்கென்ன நீ தாராளமாய் இங்கு தங்கலாம்” எனப் புன்னகையுடன் சாமியார் அனுமதித்தார். அவன் படுப்பதற்குத் தன்னிடமிருந்த ஒரே பாயை வழங்கி விட்டு தமது வேட்டியை விரித்துப் படுத்துக் கொண்டார் சாமியார். மறுநாள் காலை சாமியார் தமது அன்றாடக் கடமைகளுக்கு சென்றுவிட்டார்,

சோம்பேறியான கள்வனோ சாவகாசமாய் பத்து

மணிக்கே எழுந்திருந்தான். சாமியாரைக் காணவில்லை. ஆனால் அருகில் அவனுக்கான காலை உணவு வைக்கப்பட்டிருந்தது.

காலைக்கடனை முடித்துவிட்டு உணவை உண்டவனுக்கு புரையேறியது.

கள்வனான தன்னை நம்பி வீட்டில் விட்டுவிட்டு போயிருக்கிறாரே பெரியவர் என எண்ணிக் கொண்டான். சுற்றுமுற்றும் பார்த்த போது அங்கிருந்து எடுத்துச் செல்வதற்கு பெறுமதியான பொருட்கள் எவையும் இல்லை என்பதையும் கணித்துக்கொண்டான். அதனால் தான் தன்னைச் சாமியார் விட்டுச் சென்றதாகவும் எண்ணிக்கொண்டான்.

அவன் அவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்த போது சாமியார் அங்கு வந்தார் அவர் கள்வனின் உடல்நோவுக்கு மருந்து வாங்கி வந்திருந்தார். அதனைக் கொடுத்தபடி “ உன்னை நான் எப்படிக் கூப்பிடுவது என வினாவினார்.

சுந்தரம் இதுதான் என் பெயர்

என்றான் கள்வன்.

சரி சுந்தரம் மருந்தைப் போட்டுவிட்டு நீ ஓய்வெடு. நான் மதியச் சாப்பாடு செய்கிறேன்

சாமியார் சமைப்பதற்குச் சென்றுவிட்டார்.

நோ இன்னும் குறையாததால் சுந்தரத்துக்கும் அந்த ஓய்வு தேவைப்பட்டது. அவன் படுத்துக்கொண்டான்.

ஒரு நாள் பொழுது சுந்தரத்துக்கு இவாறே கழிந்தது.

அந்த ஒரு நாளில் அவனுக்கு ஒன்று மட்டும் விளங்கியது. உழைப்பதில் நாட்டமில்லாத தனக்கு பொருள்மேல் ஆசை இருக்கிறது. பெரியவருக்கோ உழைப்பில் பெரு விருப்பம் இருக்கிறது. ஆனால் போருளில் ஆசையில்லை.

மறு நாள் சுந்தரம் ஓரளவு தேறிவிட்டான். ஆனால் பெரியவரை விட்டு உடனே கிழம்பிவிட அவனுக்கு ஏனோமனம் வரவில்லை. அவர் காட்டும் அன்புமட்டு மல்ல அவரே சாதாரண மனிதர் போலில்லாமல் விசித்திர மனிதராக அவனுக்குப் பட்டது. பெரியவரும் அவனைப் போகச் சொல்லவில்லை.

மேலும் மூன்று நாட்கள் அவன் அவரோடு தங்கினான். அவரது எல்லாச் செயல்களையும் அவதானித்தான். அவரைப் பற்றிப் பல கேள்விகள் அவன் மனதில் எழுந்தவண்ணம் இருந்தன. பெரியவர் தன்னிடம் எதுவும் கூறாமலே தன்னையும் புதியமனிதனாக உருவாக்குவதும் அவனுக்குப் புரிந்தது.

அன்றுமாலை அவர் ஊர் சுற்றக் கிழம்பிய போது அவருடன் சுந்தரமும் சென்றான். தனது வினாக்களுக்கான விடைகளைத் தெரிந்துகொள்ள இதைவிடச் சிறந்த சந்தர்ப்பமில்லை என்க்கணித்துக் கொண்டான்.

“ ஐயா !உங்களிடம் நான் மனம் விட்டுக்கதைக்க விரும்புகிறேன்”

எனரு தொடங்கினான் சுந்தரம்

பெரியவர்” அதற்கென்ன கதைப்போம்” என்றார் புன்னகையுடன்.

“துறவி எனத் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் சிலர் பெண் ஆசை பொன்னாசை மண் ஆசையைத்துறக்காதவர்களாக அவ்வாசைகளை இலகுவாக அடையக்கூடிய வழியாக துறவறத்தைப் பயன்படுத்திக்கொண்டு மக்களை ஏமாற்றிவருகிறாரகள். நீங்களோ மிக எளிமையாகஇருக்கிறீர்கள்... மக்களும் சாமியார் என்றே உங்களை அழைக்கிறாகள். ஆனால் ஆன்மீக வழிபாட்டில் நீங்கள் ஈடுபடு நான்ப்பார்க்கவில்லை. ”

“சுந்தரா.. நான் எதையும் துறக்கவில்லை. அதனால் துறவியும்இல்லை. அதனால் துறவிகள் பொதுவாக கொள்ளும் எந்த அடையாளமும் எனக்கில்லை. நான் என்னைக் காதலிக்கிறேன். எனக்கு இவ்வாறு வாழ்வது மகிழ்ச்சியைத் தருகிறது. எனக்குத் துன்பம் தருவது எதனையும் நான் மற்றவருக்குச் செய்யாது இருக்க முயற்சிக்கிறேன்.

ஒவ்வொருவரும் தமக்கென ஒரு வாழ்க்கை நெறியை வைத்திருப்பதைப் போலவே நானும் எனக்கென இந்த வாழ்க்கை நெறியை வைத்திருக்கிறேன். பலருடைய வாழ்க்கை நெறியில் சில பொதுப்படையான நோக்கங்களும் கட்டுப்பாடுகளும் இருப்பதால் ஒரேமாதிரியானதாக தோன்றுகிறது. என்னுடைய வாழ்க்கையில் உள்ள சில போக்குகள் துறவிகளின் வாழ்வோடு பொருந்தியிருப்பதனால் என்னைச் சாமியார் என்று அழைக்கிறார்கள்.

வாழ்க்கை ஒரு நாடகம் என்பார்கள்.. இறப்புக்கும் பிறப்புக்கும் நடுவே பல்வேறு வேடங்களைத்தாங்கி நடிக்கிறோம்.

மனிதர் சந்தர்ப்பம் சூழ் நிலைக்கு ஏற்ப எப்படி எப்படியோ வாழ்கிறார்கள். நான் இப்படி வாழ்ந்து போகிறேன் -

பிறருக்கு தீங்கு செய்யாது தனது நலத்தை பேணுவது பிழையில்லை. நீயும் களவெடுக்காது உனது நலத்தை பார்த்துக்கொள்வதில் பிழையில்லை. உழைப்பு உடலைமட்டுமல்ல உள்ளத்தையும் மகிழ்ச்சிப்படுத்தும். உழைத்துப்பார். அது உனக்குப்புரியும். ”

அவரது நீண்ட பேச்சில் சுந்தரத்துக்கு சில விடயங்கள் விளங்கவில்லைத்தான். எனினும் பிறருக்கு தீங்கு செய்யாது தனது வாழ்வைச் சீர்திருத்த அவன் உறுதியாய் முடிவு செய்துகொண்டான்.



கண்ணன் விஷ்வகாந்தி

## கண்ணன் கவிதைகள்

ஒத்தக் கொம்பு
பென்சில்
ஜெர்ரி
குட்டி பிரின்ஜால்
இன்னொரு பெயரை
ஏன் சொல்லவில்லையென
கோபித்துக் கொண்டு
குப்புறப் படுத்துக் கொண்டாள்
குட்டிப் பாப்பா
'ஒல்லிப்பிச்சான்'

▸


மரண வாசனை
பினாயில் வாசனை நுரையீரல் நிரப்பும்
பிணவறை நாற்றத்தில் குடல்முறுக்கி ஓங்கரிக்கும்
எப்படிச் சொல்வேன் அம்மாவிடமென
அழுதுபுரண்டதும்
வந்தவருக்கெல்லாம் உணவிட்டவர் ஒரு வாய்
தண்ணிக்குத் கெஞ்சியதும் படமாய் ஓடும்
முகம் திருப்பிக்கொள்வேன் நடுங்கிடும் நெஞ்சுடன்
நடந்து உள்ளே சென்றவரை பொட்டலமாய்
பின்வாசல் வழியேத் துப்பிய மருத்துவமனையைக்
கடக்கயிலெல்லாம்.

சந்திரா மனோகரன்

## தீஞ்சேறு

மலையுச்சியில் மிதக்கும் அந்த நறுமணம்
யாருக்காகவோ லயித்துக் கிடக்கிறது
ஆம்... தனிமையில் , நம்பிக்கையுடன்
உறைந்து கிடக்கிறது
அவள் குரல் என்னை விளிக்கிறது
நம் இருவருக்கும் ஒரே நாசி !
வரம்பற்ற சுகந்த வாசனை நமக்கானது
பெருக்கமடைந்து கொண்டே செல்லும் பாதை
நெருக்கமும் கோணலுமான வழி
பிராணன் போவதற்கு முன்
வீழ்ந்தாலும் வாசனைக் குழிக்குள்தான்
ஒரு யுகமே முடிந்தாயிற்று
ஆண்டுகள் பல பயணித்திருப்போம்
நினைவுகளின் சுழற்சியில் அவளை இழந்தேன்
ஆயுள் கடந்தது
தேடல் தொடருகிறது
திறந்த விழிகளின் கதவு வழியே
சொக்க வெள்ளி ஆர்த்தெழுகிறது
தோளில் தேனாய்ச் சொட்டியவள்
திவ்வியமாய் உச்சிக்குப் போயிருப்பாள்
வயோதிகத்துக்கு வாசனையின் சூட்சுமம்
படவில்லை
ஆனாலும் சிரசை ஒரு பூங்கரம் வருடுகிறதே !
அனிச்சையாய் என் மேல் பரவும் நறுமணம்
நீண்டகாலமாயிற்று தீஞ்சேறு பருகி.. ,
இப்பொழுது நாங்கள் பழமையானவர்களில்லை
அந்த மணத்தின் தீண்டுதலில் இலேசாகிப்
போனோம்.

கவிஜி



## 20.10.1985

“**கா**லம் போன கடைசில இன்னுமா இது பத்தி பேசிட்டிருக்க.. ”

“காலம் போகுதா இல்லையான்னே தெரியலயே... அதான்... பேசிட்டேருக்கேன்”

மாநிற முகத்தில் தேநீர் சிவப்பு தாண்டவமாடியது.

வேம்பு எதை மறக்க வேண்டும் என்று நினைக்கிறாளோ அதை யாராவது எப்படியாவது எங்கேயாவது நினைவூட்டி தொலைத்து விடுகிறார்கள். பிறகு எங்கு சுற்றினாலும் எல்லா கோபமும் அம்மாகாரியிடம் தான் வந்து விடிகிறது.

அவளும் தான் என்ன செய்வாள். தன் நினைவில் இருந்த எல்லா குப்பைகளையும் அகற்றி பார்த்து விட்டாள். என்னென்னமோல்லாம் நினைவுக்கு வருகிறது. ஆனால் அவளுக்கு வேம்புவின் பிறந்த தேதி மட்டும் நினைவுக்கு வருவதேயில்லை.

அரற்றி பார்த்து அழுது பார்த்து... ஆங்கரித்து ஓங்கரித்து... "எனக்கு தெரியாதுடி... உங்கப்பன் இருந்தப்பவே கேட்டு தொலைச்சிருக்கணும்... நானும் விட்டுட்டேன். நீயும் விட்டுட்ட.... இப்ப வந்து புலம்பி ஒப்பாரி வெச்சா... என்னதான் பண்ணி தொலைய.... "

தலையில் அடுப்பை வைத்துக் கொண்டு சமையலறையில் சாமி கும்பிட ஆரம்பித்து விட்டாள் அம்மா.

வர்ற வழில... ரோட்டுல நின்னு ஒரு இளசு கூட்டம் கேக் வெட்டி மூஞ்சில பூசி.. "ஹே..... ப்பீ பர்த்த் ட்டேய்....... " என ராகம் போட்டு ராத்திரியை விடியலுக்கு இழுக்கும் காட்சியைப் பார்த்த பிறகு தான் வயிறு பற்றிக் கொண்டு வந்தது வேம்புவுக்கு.

வேலை செய்யும் கம்பெனியில்... வேலைக்கு சேரும் போது கூட முதலில் தடுமாறி... பிறகு பொய்யான ஒரு தேதியை சொல்லியது முதல்.. எங்கெல்லாம்.. பிறந்த நாளுக்கான தேவையை சந்திக்கிறாளோ... அங்கெல்லாம் ஒரு வாயில்லா பூச்சியை போல ஊர்ந்து கொண்டிருப்பாள். அன்று முழுக்க சோறு இறங்காது. யாரிடம் சொன்னாலும்.. இது ஒரு மேட்டரா என்பார்கள். யாருக்கு பொறந்தோம்னே தெரியாத எத்தனையோ உயிர்கள் இங்க இருக்கு... பிறந்த தேதிதான தெரியல... விடு பாத்துக்கலாம் என்று யுத்தன் போன்ற நண்பர்கள் தத்துவம் பேசுகையில்... தக்காளி சோற்றை பிசைந்து மூஞ்சியில் அடிக்கத் தோன்றும்.

கரகரவென கண்ணீர் வந்தாலும்... கூடவே பரபரவென உள்ளே ஒரு பக்க வாத்தியம் பைத்தியம் தீர்க்க மருந்து இருக்கிறது என்றது.

எழுந்தாள். தலையை வாரி கொண்டையிட்டாள்.

"ஊருக்கே பெரிய மனுஷன் ராயப்பன் பெரிப்பா தான். சுதந்திர போராட்ட நினைப்பையெல்லாம் அப்பப்போ கிணத்து மேட்டுல போட்டு தாளிக்குமே. அதுக்கு கண்டிப்பா நினைப்பிருக்கும். இத்தனை நாள் இந்த யோசனை வராம போச்சே... "

நினைத்துக் கொண்டே வேகமாய் கிளம்பி அடுத்த ரெண்டாவது நிமிடத்தில் ராயப்ப பெரிப்பா வீட்டு திண்ணையில் அமர்ந்திருந்தாள்.

"என்ன சாமி திடுதிப்புனு... கம்பேனில வேல கொறைஞ்சிடுச்சா... ஒரு சிப்ட்லயே வந்துட்ட மாறிருக்கு... " - மீசையை முறுக்கிக் கொண்டு சந்திரிகா பீடியை இழுத்தபடியே தொடை வரை தூக்கி இறுக்கி கட்டிய... அழுக்கேறிய வேட்டியோடு அப்படியே சுவரோரம் சரிந்து குத்த வைத்து அமர்ந்தார் பெரிப்பா.

எங்கோ வெறித்திருந்த வேம்பு நேராக விஷயத்துக்கு வந்தாள்.

"பெரிப்பா... என் பொறந்த தேதி உனக்கு நினைப்பிருக்கா.... "

தேங்காய் மட்டையை உரித்துக் கொண்டிருந்த பெரியம்மா... சத்தம் கேட்டு திடுக்கிட்டு திரும்பி பார்த்துவிட்டு.... தனக்கும் இதற்கும் தொடர்பில்லை என்பது போல திரும்பி கொண்டாள்.

கடலக் காட்டுல வெச்சு.... கேட்டு... பதில் தெரியாம... பேந்த பேந்த முழிச்ச பெரியம்மாவை.... "நான் காண பொறந்தவ.... நான் காண குத்த வெச்சவ... நான் காண கொழந்த பெத்தவன்னு வாய் கிழிய பேச தெரியுதுல.. என் பொறந்த தேதியை நினைப்பு வெச்சுக்க தெரியலயா.... நீ எல்லாம் பெரிய மனுசி.... த்தூ... "

கொடூர பின் மதிய ஒத்த பனை சாட்சி... அந்த காட்சி மீண்டும் மண்டைக்குள் துப்பியிருக்க வேண்டும். திரும்பிய பெரியம்மா... கழுத்தில் விழுந்த எறும்பு கடிக்கு கூட மீண்டும் இந்த பக்கம் திரும்பவே இல்லை.

"அது கண்ணு... நீ பொறந்தன்னைக்கு அப்பிடி ஒரு மலை... இந்தூர்ல அந்த மாரி ஒரு மலைய நான் பாத்ததுல்ல. உங்கப்பன் குன்னத்தூர்க்கு ஒரு சோலியா போய்ட்டான்... உங்க ஆத்தாளுக்கு திடுதிப்புனு வயித்த வலி வந்துருச்சு.. அந்த நிமிசமே வண்டி புடிச்சு.... "

"பெரிப்பா.. இந்த கதை எல்லாம் எனக்கு தெரியும்... அந்த பெரிய மழைல... நீங்க வண்டி புடிச்சு எங்கம்மாவை தூக்கிட்டு போனீங்க. கோபி ஆஸ்பத்திரில சேர்த்தீங்க... அடுத்த அரை மணி நேரத்துல நான் பொறந்தேன். எங்கம்மாவே சொல்லி இருக்கு. அதெல்லாம் சரி... நான் கேக்குறது... நான் பொறந்த அந்த தேதி என்னன்னு சொல்லு... அவளோ தான்... "- வேம்புவின் கண்களில் பிரசவ வேதனை.

அடுத்து வேகமாய் சென்று அமர்ந்த இடம் கருப்பசாமி மாமா வீட்டு திண்ணை. அருக்காணி அத்தைக்கு விஷயம் தெரியும். எப்பவாவது எவனாவது ரோட்ல... பஸ் ஸ்டேண்ட்ல.... சினிமா கொட்டாய்ல... கூட வேலை செய்யற சேக்காளிங்க... இப்பிடி பொறந்த நாள் கொண்டாட்டம்.... அது இதுனு வெறி ஏத்தி விட்ருவானுங்க. இவ வீட்டுக்கு வந்து சாமியாட்டம் ஆடுவா. வம்பு வேண்டாம் சாமி...

உள்ள படுத்திருந்தவ அப்படியே கண்ண மூடி தூங்கிட்டா.

"என்ன.... பொண்ணு... இப்ப வேலை திருப்புருலயா..... இல்ல அவிநாசிலயா... திருப்பூர்ல அடிக்கடி வேலை இல்லாம போயிடுதுல்லயா..... ஜனங்க என்ன தான் பண்ணுங்க... இப்பிடி ஆனா... "

குறுக்கிட்ட வேம்பு... சூரிய காம்பாய் கக்கினாள்.

“ஜனங்களாம் இருக்கட்டும்... நான் அக்டோபர் மாசம் பொறந்தேன்னு நீ தான சொல்லி இருக்க... ”


“ஆமா அதுலென்ன.... ”

“அதுல ஒண்ணுமில்ல.. ஆனா அதுல... நான் பொறந்த தேதிய... நினைப்பு வரும் போது சொல்றேன்னு சொன்னீல.. ”

“ஆம்மா.... சொன்னேன்.... ”

“நினைப்பு வந்துச்சா... ?”

குடித்த கால் வாசி பிராந்தி.... கன்னத்தில் வியர்வையாய் வழிய ஆரம்பித்து விட்டது. நன்றாக முகம் பார்க்க எங்கிருந்தோ வந்து அப்பியது... இனம் புரியாத தடுமாற்றம். பின் மண்டை வழுக்கையை அனிச்சையாய் தடவிக் கொண்டே.... ” அது சாமி... பத்தாம் தேதியா.. பதினஞ்சா..... ன்னு ஒரு சந்தேகம். இன்னொன்னு.... அது செப்டம்பரானு கூட ஒரு சந்தேகம் இருக்கு.. அதான் கொஞ்சம் குலப்பம்..... ” - அவர் தெளிவதற்கே என்னென்னவோ குழப்பம் தேவைப்பட்டது.



எதிரே இருந்த மண் பானையைத் தூக்கி தலையில் அடிக்கலாம் போல தோன்றியது.

“ஊரு நியாயம் சொல்றதுன்னா மொத ஆளா போயி நின்னுக்கறது... பஞ்சாயத்துனா ட்ரவுசர் தெரியற மாதிரி வேட்டிய மடிச்சு கட்டிட்டு மொக்க போடறது.. ஆனா சொந்த மருமக புள்ளையோட பொறந்த தேதியை நினைவு வச்சு சொல்ல தெரியல.. நீல்லாம் பெரிய மனுசன்னு... சீக்கிரம் செத்து தொலை... ”

கத்தி விட்டு நகர்ந்தவள்... இருப்பதிலேயே.... நரை கூடிய ஊர் பெருசு.. கிழவி ரத்னம் வீட்டு வாசலில் நிற்கவும் முடியாமல் அமரவும் முடியாமல்.... வந்த கண்ணீரை வழிய விட்டு... வானம் பார்த்து சரிந்து திண்ணையில் சாய்ந்து நின்றாள்.

“திரும்பற பக்கமெல்லாம் தினம் தினம் பொறந்த நாள் தான். யாரோ யாருக்கோ வாழ்த்து சொல்லிட்டே தான இருக்காங்க. நான் என்ன பாவம் பண்ணேன். எந்த நாள்ல பொறந்தேன்னு கூட தெரியாமருக்கறது எவ்ளோ பெரிய அவமானம் தெரியுமா. என் அக்கா ரெண்டு பேரோட பொறந்தநாளும் தெரிஞ்சிருக்கு. தம்பி பொறந்தநாளு தெரிஞ்சிருக்கு. இடைல என்ன மட்டும் ஏன் விட்டாங்க. ரெண்டாங்கிளாஸ் தாண்டி படிக்கவும் வைக்கல. பேர் கூட எழுத தெரிய மாட்டேங்குது. எவ்ளோ தற்குறியா இருக்கேன்.. மானம் போகுது. வரிசையா புள்ளைய பெத்துக்க மறந்தாங்களா... அதெல்லாம் கரெக்டா செய்ய தெரியுதுல. பெத்த பள்ள பொறந்தநாள ஞாபகம் வெச்சுக்க தெரியலயா... அப்டியே அருவா எடுத்து ஒவ்வருத்ரயா வெட்டி போடணும்.... ”

வேம்பு அழ ஆரம்பித்து விட்டாள். ஆற்றாமைக்காரிகளின் ஆயுதம் அழுகையைத் தவிர வேறென்ன.

“சாகற நாள் தெரிய கூடாது. ஆனா பொறந்த நாள் தெரியணும் தானே ஆத்தா... இந்த ப்பேஸ்புக்குகாரன் கூட என் பொறந்த நாளை தெரியலங்கறான்... என்ன பண்ண. நானே வெச்சுக்கிட்ட பொறந்த நாளை எனக்கே புடிக்கல. அதை மத்தவங்ககிட்ட சொல்லும் போதெல்லாம் உள்ள என்னவோ குத்துது. இதை எப்பிடி சொல்லி புரிய வைக்கறது. உங்க எல்லாருக்கும் இது போற போக்குல வந்து போற ஒரு விஷயம். ஆனா எனக்கு இது என் மனசோட ஒட்டிக்கிட்டுருக்கற சொமை. ஒரு பொறந்த நாளை நினைப்பு வெச்சுக்க பெத்தவங்களுக்கும் தெரியல. சொந்தக்காரங்களுக்கும் துப்பில்ல. இதுல வீர வசனம் எல்லாம் பேசறீங்க... நேரு பொறந்த நாளல்லாம் நினைவு வெச்சிருக்கீங்க... என் பொறந்த நாளை மறந்துட்டீங்க... ”

எந்த கேள்விக்கும் எந்த அரட்டலுக்கும் எந்த புலம்பலுக்கும் கிழவியிடம் பதில் இல்லை. இருந்தாலும் அது இல்லை தான். சாகும் நாளுக்கான காத்திருப்பில்... வாழும் நாளே மறந்து போன கிழவி விதி அது. அமர்ந்து மயிர் கோதி கொண்டு வெள்ளை அருவி என கொட்டி கிடக்கும் தலை மயிரை சிக்கெடுத்து கொண்டிருந்தது.

விடியல் தன் கடமையைச் செய்தது.

ஒய்ந்த நிலவொளியைப் போல.. அந்த விடிகாலை நேரம் அவசரமாய் தன்னை பிரசவித்து கொண்டிருந்தது. முழு இரவும் ஊரெல்லாம் அலைந்து திரிந்தது தான் மிச்சம். துளி தூக்கமில்லை. அது தான் துக்கத்துக்கு

தேவை.

போன மாதம்.... படித்த பள்ளிக்கு சென்று டிசி கேட்டு பார்த்து... "நடந்த திருட்டில்... ஒரு டிசி கட்டே காணாமல் போனதில் உன்னுதும் சேத்து தான்... !" என்று கிடைத்த பதில்... ஐயோவென தலையில் அடித்துக் கொண்டு அழ வைத்தது. நினைத்தாலே அழுகை மூட்டும் நினைவு.

கால் போன போக்கில் நடந்தவள்.. ஊர்க்கோடிக்கு வந்துவிட்டிருந்தாள்.

கல்லா குழி அதிகாலை சிலு சிலுப்பில் அமைதியாய் மினுங்கிக் கொண்டிருந்தது. எப்போதெல்லாம் தனிமை தேவையோ.. எப்போதெல்லாம் அழுகை வேண்டாமோ... அப்போதெல்லாம் இங்கு அந்த அய்யனாருக்கு அடியே இருக்கும் மர நிழலில் அமர்ந்து விடுவது வழக்கம். அமர்ந்துவிட்டாள். குத்த வைத்து மரத்தோடு முதுகொட்டி சரிந்தவள் முன்.... அதிகாலை பறவை பட்சிகள் பறந்தோடுவதும்... நீல வானம் நித்திரை களைந்து சோம்பல் முறிப்பது போல மேகத்தை அசைத்து மேக்கப் போடுவதுமாக... பார்க்கவே.... என்னவோ சுமை இறங்கியது போல. காணும் கண்கள் வழியே பரவும் குளுமைக்குள் தலையை முக்கும் நினைப்பு நன்றாக இருந்தது.

கல்லா குழி என்பது பாறை உடைத்து உடைத்து தேங்கிய குழியில் நீர் சூடி குளமாகும் சூட்சுமம்.

நீச்சலும் பழக்கும். நீச்சல் மறந்தவர்களுக்கு மரணிக்கவும் பழக்கும்.

உள்ளே விழுந்த வேம்புவுக்கு பேச்செல்லாம் மூச்சு தான். குடிக்க குடிக்க தீர்வேனா என்கிறது கல் சூழ்ந்த குளத்து நீர். சுழன்று தத்தளித்ததில் மண்டை முட்டிக் கொண்ட பக்கவாட்டில் முதுகு பெயர்ந்த பாறையும்... பாசம் பிடித்த பச்சையும். தபக் தபக் என முங்கி முங்கி.... எழுந்து எழுந்து.... முங்கி எழுந்து... முங்கி எழுந்து.... இதோ இனி முங்குவது தான் சரி என்று இயலாத உடல் ஒரு முடிவுக்கு வருகையில்... கொத்து மயிரைப் பற்றி... கொத்தாக தூக்கிய முருகேசன்... ஒரு சின்ன வயசு அய்யனார் என்றால் சரி தான்.

பேச்சு மூச்சில்லாமல் கிடந்த வேம்புவை பாறையில் போட்டு வயிற்றை அழுத்தி... நெஞ்சை குத்தி... அதற்குள் அந்த பக்கம் துணி துவைத்துக் கொண்டிருந்த அண்ணன்மார்கள் அக்காமார்கள் ஓடி வந்து மாட்டு வண்டி சக்கரத்தில் படுக்க வைத்து சுத்தி...

நீருக்குள் நீண்ட நேரம் போராடி... மூச்சு விட கிடைத்த இடைவெளியில்.. ஆவ் ஆவ் என ஒரு பிசாசை போல மூச்சை குடித்த வேம்புவுக்கு நீருக்கு மேல் இருக்கும் உலகம் எத்தனை ஆதுர்யமானது என்று அப்போதே புரிந்தது.

அதே போல தான் இப்போதும் மூச்சு விட்டாள்.

காலம் எத்தனை ஓடினாலும்... இப்போது நடந்த மாதிரி இருக்கிறது.

அந்த குளம் எதுவும் தெரியாது போலவும் எல்லாம் தெரியும் போலவும் சலனமற்று கிடந்தது. எல்லாவற்றுக்கும் அது தான் சாட்சி போல எங்கிருந்தும் வந்த நாரை ஒன்று அந்த குளக்கரையில்.. நின்று... நிதானித்து டபக் டபக் என நடப்பது அத்தனை அழகு. அது வேம்புவுக்கு எதையோ நினைவூட்டியது. கண்களில் ஒரு பளிச். காதுகளில் ஒரு படபடப்பு. இருந்த கிறுக்குத்தனங்கள் எல்லாம் நொடியில் வெண்மையாகி காற்றில் பறப்பது போல ஓர் எண்ணம். நினைப்பில் ஒரு தெளிவு.

மூழ்கிக்கொண்டிருந்த குளத்துக்குள்ளிருந்து எழும்பி விட அவளுக்கு.... கையில் ஒரு நாரையின் இறகு முளைத்தது போல ஒரு நம்பிக்கை.

பட்டென எழுந்து நின்று... திரும்பி அய்யனாரை கூர்ந்து பார்த்தாள். இன்று அய்யனாரும் கூர்ந்து பார்ப்பது போல இருந்தது. அவளுக்கு விளங்கி விட்டது. அவள் விடுகதைக்கு விடை கிடைத்து விட்டது.

குளத்தில் மூழ்கி.... தான் தப்பி பிழைத்ததற்கு.... அய்யனார் கையில் இருக்கும் கத்தியை அப்பா இனாமாக கோவிலுக்கு படைத்தது நினைவில் நாக்கு துருத்தியது. ஆனால் அது முக்கியம் அல்ல. அதில் உபாயம் என்று அப்பா பேர் எழுதி.... தேதியும் எழுதி இருந்தது தான் இப்போது முக்கியம். மனக்கண் முன் வந்து போனது பெயரும் நாளும். இதோ இப்போதும் கண்கூடாக சிறு எழுத்தில் சித்திரம் போல தெரிகிறது.

கண் கலங்க புண் முறுவல் அவள் முகத்தில் அனிச்சையாய் வழிந்தது. உள்ளே ஒரு சுழற்சி. அல்லது புரட்சி. என்னவோ ஒரு உற்சாகம். அவள் முடிவெடுத்து விட்டாள். சாவின் விளிம்பு வரை சென்று பிழைத்த அந்த தேதி தான் இனி தன் பிறந்த நாள்.

அய்யனார் ஆமோதித்தது போல தான் தெரிந்தது. அவர் கையில் வீரமாய் வீற்றிருந்த அருவாவும் கழுத்து வளைந்து ஆம் என்பதாகத்தான் இருந்தது.

அய்யனாரை கை எடுத்து கும்பிட்டு கண்ணீர் மல்க பார்த்தாள்.

*"ஆமாம்.... இனி... தன் பிறந்த நாள் 20. 10. 1985 தான்... "*

கணவன் முருகேசன் கல்லா குழி ஒற்றையடியில் வேம்புவைத் தேடிக்கொண்டு வந்து கொண்டிருக்கிறான்.



ரகுநாத் வ, மதுரை

## மேகங்களுக்கு கூண்டு செய்பவள்

பறக்கும் குக்கரின்
விசில் சத்தத்தில்
ரசித்த பட்டாம்பூச்சியொன்று
சட்டென வீறிடுகிறது
கைகளில் அப்பியிருந்த
சோப்பு நுரையின்
வண்ணத்தில் பிடித்த
மலரொன்று புலனாகிறது
கற்பனையில் எழுதிக்குவித்த
கவிதைகளை 'டெலிட்' செய்கிறது
'ஏய்' எனும் ஒற்றையேவல்
பரிமாறுவதற்காக நறுக்கிய
வாழையிலையில்
'இன்டிரியர்' டிஸைன் புலனாகிறது
மேகப்பறவைகளெல்லாம்
வானக் கூண்டுடைத்து
மழையாகப் பறந்துவருவது
போல கற்பனை அறிக
சமையலறைச் சாளரமோரம்
தெரியும் பூச்செடிக்கு
பறந்து செல்ல துடிக்கிறது
அவளின் இறக்கைகள்...

கோபால்தாசன்

## ரசிகன்

ரெண்டும்
பொண்ணாப் போச்சேன்னு
குல தெய்வச் சாமிக்கு
விரதமிருந்து பொங்க வச்சு
கோயில் குளமெல்லாம்
சுத்தி வந்து
பெத்த ஒத்த ஆம்புள்ள
குடிகார புருசன நம்பி
பிரயோசனமில்லன்னு
வூடு வூடாப் போய்
பத்துப் பாத்திரம் தேச்சி தேச்சி
வளத்தப் புள்ளைங்க
அம்மா...
நீ இனி கவலைப்படாத
நா பாத்துக்கிறேன்னு
சொல்லி கம்பெனியில சேந்து
நாலு மாசங்கூட ஆகல
இ. எம். ஐல பல்சர்
பைக்கோட வந்தான்
டேய்...
வூடு கெடக்கிற கெடப்புல
இது ஒனக்கு தேவையான்னு
கேட்டப்ப
அம்மா... இது என்னோட
கனவுமான்னு வாய
அடைச்சான்
நேத்து ராத்திரியில
அவன் தலைவன் படம்
ரிலீசுன்னு போனான்...
இன்னு ஒத்த ஆணியில
சுவத்தில படமா தொங்கி
எங்கள
நடைபிணமாக்கிட்டான்.

சங்கர சுப்பிரமணியன்

# மரபுக்கவிதை எனும் ஒப்பணையுடை மங்கை!


மரபுக் கவிதையாய் கவிதைசொல்ல
தரவென பெரிதாயேதும் தடயமின்றி
சொந்த விதிசெய்தே நான் படைத்த
விந்தைக் கவிதையிதைக் கேட்பீரே
›
கூந்தலில் கொஞ்சம் எண்ணெய்பூசி
பாந்தமுடன் அழுத்தியே தலைவாறி
இறுக்கமாய் கூந்தலை பின்னலாக்கி
முறுக்கி பின்னிய கூந்தல் பின்னாட..
›
தொங்கியாடும் அழகிய சடைமுடிவில்
அங்கே ஆடுகின்ற குஞ்சம் மிக அழகு
தலைமுடி அழகுற தனி ஆபரணங்கள்
தலை வகிட்டிலும் அழகு நெற்றிச்சூடி
›
முடிக்கு முடிவிலா அழகைச் சேர்க்க
அடி நுனிவரை பின்புறம் அழகூட்டி
வண்ண மலர்கள் சான்றாய் நிறைத்து
பெண்ணும் மலராய் மலர்ந்திருப்பாள்
மஞ்சள் பூசி குளித்த மதிவதனமதில்
மிஞ்சிடும் நெற்றிக்கு அழகு சேர்க்க
தண்ணிய குணமுடைய சந்தணமாம்
பண்பாக திலகமும் சேர்ந்ததழகாம்..
›
திருத்திய முழுப் புருவங்கள் கீழாக
வருத்தும் கண்களிலே மையும் தீட்டி
கூரிய நாசியின் இருபுறமும் அங்கே
சீர்மிக்க அழகாய் இரு மூக்குத்திகள்
நாசியினடி மறைந்தும் அழகூட்டுகிற
ஊசிமயிர்தனை மழித்து அழித்திடாது
ஆசியொடு ஒரு புல்லாக்கு அழகூட்ட
பூசிய வர்ணம் செவ்விதழினில் அழகு
›
இரு செவி மடல்களிலும் மாட்டியொடு
தருகின்ற அழகை கூட்ட தோடுகளாம்
குண்டலங்களும் தனியொரு அழகாய்
கண்டிட வியந்திடும் முகமும் அழகாம்
›
கச்சிதமாய் அழகூட்டும் மேல் உடுப்பு
மெச்சியே ஒட்டி உறவாடிட பட்டாடை
பட்டாடைமேல் அழகான ஒட்டியாணம்
கட்டுடல் கவர்ந்திழுக்கும் அவள் அழகு
›
இருகைகளிலும் எழிலூட்ட வளையல்
பெருமிக்கும் விரல்மெச்ச மோதிரங்கள்
மொத்தமாய் பொய்நகமும் பூச்சுடனும்
சித்திரப் பாவையின் விரல் நகமுமழகு
›
உள்ளங்கைகளை மருதாணி அழகூட்ட
கள்ளமின்றி சொல்லும் கையழகென்று
தெள்ளுதமிழக்கு இலக்கணம் போல்
கிள்ளையவள் பேச இலக்கு செய்வாள்
›
பாதங்களில் ஒலிக்கும் கொலுசுகளும்
பேதமின்றி பறைசாற்றும் விரலணியும்
பாவையாய்ப் பார்த்து வியந்து போற்ற
பூவையும் வந்தாள் மரபுக் கவிதையாக
›
மரபுக்கவிதை என்று மார்தட்டி நின்று
கரவின்றி செப்புகின்ற மாந்தருக்கும்
ஒன்று சொல்வேனிங்கு உறுதியொடு
நன்றே உங்கள் கூற்று என்ற போதும்
›
மரபுக்கவிதை ஒப்பணைசெய்த மங்கை
மரபான எதுகை மோனை கொண்டவளே
சீர் தளை ஓசையென பட்டுடையணிந்து
ஊர்வலம் வாராதுபோயின் மிளிர்வாளோ
›
இயல்பு கவிதையது இயல்பான நங்கை
இயல்புடன் மிளிர்வாள் ஒப்பணையின்றி
புறவழகு ஒதுக்கிவிட்டு அகவழகு காட்டி
அனைவரையும் ஈர்த்திழுக்கும் பேரழகி
›
அளவிலா அலங்கார மரபுக் கவிதை அழகு
எளிமையாய் இலங்கும் மங்கை தனி அழகு
என்றோ ஒருநாள் மரபுக்கவிதையும் அழகு
என்றும் எளிமையான மங்கையும் ஓர் அழகு
›
மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் என்ற
வலியுறு வள்ளுவன் வழியது காண்கிற்பின்
கீழிருந்தும் கீழல்லார் கீழல்லர் என்றிங்கு
அழிவின்றி பொருள் சொல்லின் சிறக்கும்!

# உலகை மாற்றிய பெண் கணித மேதைகள்

*(கட்டுரைத்தொகுப்பு)*

பழனி அருள்மிகு பழனியாண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரியில் விலங்கியல் துறையில் பேராசிரியராகவும் கல்லூரியின் முதல்வராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் மோகனா அவர்கள் இன்றும் பல்வேறு தளங்களில் தொடர்ந்து இயங்கி வருபவர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம், அறிவொளி இயக்கம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என பல தளங்களில் தன்னை இணைத்துக் கொண்டு செயலாற்றுபவர். சுமார் 150 நூல்கள் எழுதியுள்ளார். மார்பக புற்றுநோய்க்கு சிகிச்சை மேற்கொண்டு அதை எல்லோருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தன்னையே முன்மாதிரியாக எடுத்துக் காட்டியவர்.




புற்றுநோயால் உயிர் நீத்த அறிவியல் பெண் விஞ்ஞானிகளுக்கு சமர்ப்பணம் என்ற குறிப்பின் கீழ் பேராசிரியர் மோகனா அவர்களால் எழுதப்பட்ட "உலகை மாற்றிய பெண் கணித மேதைகள்" கட்டுரைத் தொகுப்பின் அடித்தளமாக விளங்குவது பெண்களின் விடாமுயற்சியும் துணிச்சலும் தன்னம்பிக்கையும் மட்டுமே..

ஆண் பெண் சமத்துவம் நிலவாத காலகட்டத்தில் ஒரு பெண் தனது கருத்துக்களை குடும்பத்திலேயே நிலை நிறுத்த முடியாத சூழலில் உலகத்திற்கு கொள்கையாக வெளியிட முடியுமா? அப்படியே வெளியிட்டாலும் அதை இந்த உலகம் அறிவின் கண்கொண்டு திறந்து பார்க்குமா என்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் உலகை மாற்றிய பெண் கணித மேதைகளின் வலி நிறைந்த வாழ்வை வெளிப்படுத்தும் கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

இடைவிடாத உழைப்பினாலும் சமூகத்தின் பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கு அடிபணியாமலும் தங்களின் விடாமுயற்சியால் புதிய புதிய கொள்கைகளைக் கண்டறிந்து அவற்றை உலகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என்று எழுத்து வடிவ களம் இல்லாத காலத்தில் களிமண்ணிலும் சிற்பங்களிலும் அவற்றை எழுதி வைத்து இன்று உலகத்திற்கு வழிகாட்டும் நிறைய பெண்களின் உழைப்பை இந்நூல் தெளிவாகப் பேசுகிறது.

இவர்களின் வரலாறுகள் நிறைய இடங்களில் மறைக்கப்பட்டிருக்கின்றன. நிறைய இடங்களில் மறக்கப்பட்டு இருக்கின்றன. ஆனாலும் அவர்கள் சார்ந்த துறையில் நாம் இன்று பயன்படுத்தும் கருவிகள் ஆகட்டும், கொள்கைகளாகட்டும், செயலிகளாகட்டும் அதைக் கண்டுபிடித்த பெண்களை நினைவுகூர்ந்த வண்ணம் உள்ளன என்பதை நாம் மறக்க முடியாது.

**தியானோ, பெண் கணிதவியலாளர் – கிமு 546**

கிரேக்கத்தின் குரோட்டான் நகரில் கணிதம் கற்பித்துக் கொண்டிருந்த தியானோ பித்தாகரஸ் அவர்களை சந்திக்கிறார். அம்முதல் சந்திப்பிலேயே இருவரும் கணிதத்தில் மனம் ஒன்றிணைந்து குரோட்டன் நகரில் கணித பயிற்சிப் பள்ளியை நிறுவுகிறார்கள். ஒரு கட்டத்தில் அப்பள்ளியே நகரின் அரசை தன்

கட்டுப்பாட்டில் வைக்க நேர்கிறது. இதை எதிர்த்து அரசு அதிகாரிகள் தியோனாவின் கணித நிறுவனத்தை சூறையாடி எரிக்கிறார்கள். அப்போது அங்கு நடந்த கலவரத்தில் பிதாகரஸ் கொலை செய்யப்படுகிறார். அதேசமயம் பித்தாகரசுக்கும் தியானோவுக்கும் பிறந்த மூன்று பெண் குழந்தைகள் மற்றும் இரண்டு ஆண் குழந்தைகளின் வழியாக தியானோவின் கணித குறிப்புகள் காப்பாற்றப்படுகின்றன. பிதாகரசின் வாழ்க்கை வரலாறு, தங்க சராசரி தேற்றம், எண் தியரி,முதன்மை எண்கள், விண்வெளியியல், பிரபஞ்சத்தின் உருவாக்கம், பெண்களுக்கான அறிவுரை, ஒழுக்க நெறி, கடமை உணர்ச்சி, நேர்மை, பித்தாகரசின் தத்துவஞான கருத்துகள் என ஏராளமான படைப்புத் தொகுப்புகளை தியானோ உருவாக்கியுள்ளார். இன்று நாம் பயிலும் பித்தாக்கரசின் தேற்றமும் அதன் பயன்பாடும் தியானோவின் விடாமுயற்சியால் காப்பாற்றப்பட்டு நமக்கு கிடைத்த பொக்கிஷம் என்பதை அறியும்போது தியானோவின் தியாகத்தை உணர முடிகிறது.

## ஹைப்பேசியா

உண்மைகளை அறிய உதவும் ஒரே கருவி கல்விதான் என்று பலமாக நம்பி கல்வியை கிரேக்க மக்களுக்கு பரப்புவதே முதல் கொள்கை என செயல்பட்டவர். எண் கணித கொள்கையை உருவாக்கியவர். இயல் கணிதத்திலும் விற்பன்னர். சூரியன் சந்திரன் விண்மீன் போன்றவை காணப்படும் கோணம் அறிய உதவும் அஸ்ட்ரோலாப் என்ற வானியல் விண்மீன் தொலைவினை அளக்கும் கருவியை கண்டுபிடித்தவர். திரவங்களின் அடர்த்தி ஈர்ப்பு ஆகியவற்றின் தொடர்பு அறிய நீர்ம எடைமானியை உருவாக்கியவர். நீருக்குள் கிடக்கும் பொருட்களை கண்டறிய நீர்ம நோக்கியை தயாரித்தவர். மதவாதிகளின் சதியால் கொலை செய்யப்பட்டவர்.

கணித விஞ்ஞானிகளின் வாழ்க்கையினை வெறும் செய்திகளாக தராமல் ஆதிக்கத்திற்கு எதிரான அவர்களது போராட்ட வரலாற்றையும் பதிவு செய்திருப்பதுதான் இந்த புத்தகத்தின் சிறப்பான ஒன்று.

இதில் 14 பெண் கணித விஞ்ஞானிகளின் வரலாற்றைத் தொகுத்து அளித்துள்ளார்.

- டோரதி ஜீன் ஜான்சன் வாகன் ஓர் அமெரிக்க கணிதவியலாளர் மற்றும் மனிதக் கணினி. இவர் ஒரு சாதாரணப் பெண்ணாக குடும்பங்களைப் பார்த்துக் கொண்டும் குழந்தைகளை கவனித்துக் கொண்டும் ஆய்வுகளில் ஈடுபட்டார்.
- கணிதம் மற்றும் அறிவியல் பற்றிய கருத்துக்களை ஆண்களுடன் விவாதிக்க ஒரு பெண் என்ற உரிமைக்காகப் போராடி இறுதி வரை அதில் தோல்வி கண்டவர். பெண் என்பதால் லூவ்ரில் உள்ள கிங்ஸ் லைப்ரரியில் உட்காரக்கூட எப்போதும் மறுக்கப்பட்டவர் எமிலி. நியூட்டனின் வானியல் மற்றும் ஒளியியலை பரந்துபட்ட பிரஞ்சு வாசகர்களுக்கு தெளிவான முறையில் விளக்கியது நியூட்டனின் தத்துவத்தின் கூறுகள் என்ற புத்தகம். இதை எமிலியும் வால்டேரும் கூட்டாக எழுதியிருந்தனர். ஆனால் எமிலியின் பெயர் அதில் இடம் பெறவில்லை.
- கேத்தரின் ஜான்சன் ஒரு முன்னோடி கணிதவியலாளர். பூமியிலும் வானத்திலும் மனித குலத்தின் எதிர்காலத்தை வடிவமைத்தவர்.
- இவரின் கணினி வடிவமைப்பை நம்பியே நிறைய விண்வெளிப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மரியா கெய்தானா அக்னேசி கணிதம் மற்றும் தத்துவத் துறையில் பெரும் பங்காற்றியவர். ஏழு மொழிகளில் விற்பன்னர். 12 வயதிலேயே கடுமையான நோயினால் அவதியற்றும் தனது ஆய்வுகளை கைவிடாமல் தொடர்ந்து போராடியவர்.
- பெண் என்ற ஒரே காரணத்திற்காக கணிதத்தில் எந்தவிதமான ஆய்வும் மேற்கொள்ளக்கூடாது என்ற பிரஞ்சு அரசின் கட்டுப்பாட்டின் காரணமாக தான் வெளியிட்ட கொள்கைக்குப் பரிசாகக் கிடைத்த ஒரு கிலோ தங்கத்தை பெற முடியாமல் தவித்து அங்கீகாரம் பெறாமல் மரணம் அடைந்தவர் சோஃபி ஜெர்மைன். வெள்ளிக் கோளிலுள்ள பள்ளம் ஒன்றுக்கு இவரது பெயர் சூட்டப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டுள்ளார்.

ஒரு சாதனையாளர் என்ன சாதித்தார் என்பதை விட அதனை எப்படி சாதித்தார் என்பது முக்கியம். பெண் விஞ்ஞானிகளுக்கு இது மிக மிக பொருந்தும். ஆணாதிக்கம் நிறைந்த அன்றைய காலகட்டத்தில் தங்களின் கருத்துகளின் வழியாக உலகத்தின் முன்னேற்றத்திற்கு நம்மால் ஏதாவது ஒரு சிறு உதவியாவது செய்ய முடியும் என்று இந்தப் பெண்கள் எவ்வளவு அரும்பாடுபட்டிருக்கிறார்கள் என்பதை உணர்வதற்கு இந்நூல் சிறப்பான வழிகாட்டியாக அமைகிறது.

உலகை மாற்றிய பெண் கணித மேதைகள்
பேராசிரியர் சோ மோகனா
கட்டுரைத் தொகுப்பு
வெளியீடு புக்ஸ் ஃபார் சில்ரன்
தொடர்புக்கு 04424 33 24 24
முதல் பதிப்பு அக்டோபர் 2022
பக்கம் 184
விலை ரூ 180



இரா. மதிராஜ்

## மனத்திரை

இரவு மணி ஒன்பதானதும்
நேரமாகிவிட்டது என
வீட்டிற்கு விரையும்
எனக்கு,
ஒரு சில மணித்துளிகள்
வீட்டிற்க்கு வெளியே
படுத்துக் கொள்ள
முடியாத எனக்கு,
மழைப் பெய்ததும்
கதவடைத்து
மழைத் துளிகளின்
ஓசையை ரசித்துக்
கேட்கும் எனக்கு,
பலமுறை மனதில்
மின்னலாய்
சாலையில்
திரும்பும் போது
பாக்கவாட்டுக்
கண்ணாடியில்
தெரிந்த
நாடோடிகளின்
வண்டி மாடுகளும்,
தற்காலிகக் கூரைகளும்
இதய சிம்மாசனத்தில்
கூடுக் கட்டியிருந்தது.

பா. சிவகுமார்

## சுவரோவியங்கள்

குழந்தைகளுள்ள
வீட்டின் சுவர்களிலெல்லாம்
குழந்தையின்
கைக்கெட்டும் தூரம்வரை
வண்ணமயமான
கிறுக்கல்கள்
எவ்வளவோ படித்திருந்தாலும்
மழலைமொழியை
மொழிபெயர்க்க தெரியாது
திணறுகின்ற பெரியவர்கள்
சுவரோவியங்கள் குறித்து
குழந்தையிடம் கேட்கும்போது
விழிகள் விரித்து
கைகளை ஆட்டி ஆட்டி
சொல்லும் கதையில்
ஒளிந்து கொண்டுள்ளன
உலகத் திரைப்படத்தை
மிஞ்சிய திரைக்கதைகள்

மு. ஆறுமுகவிக்னேஷ்

# தலவிருட்சம்

கரும்பச்சை நிறத்தில்
சிறிய இலைகளைக் கொண்ட
வேப்பமரம் மட்டுமே
பரவலாக நிற்கும் தெருவில்
எங்கள் வீட்டுவாசலில் நிற்கிறது
பொன்பச்சை நிறத்தில்
பெரிய இலைகளைக் கொண்ட
லெட்சக் கொட்டக் கீரை மரம்
அந்த இலைகள் ஒவ்வொன்றும்
உள்ளங்கையை விட
பெரிதாக இருக்கும்
பார்க்க பார்க்க
கண்களுக்கு அவ்வளவு குளுமை
மஞ்சள் நிறத்தில் அவை
பழுத்து உதிரும் போது
பத்தரை மாற்றுப் பொன்னே தான்
பெரிய காளான் போல் இலைகளே பச்சை நிற
மலர்களாக பூத்துக் குலுங்கும் அந்த மரத்தில்
இலைகளைக் கீரை சமைக்க நிறைய பேர் பறித்துச்
செல்வர்
இந்த மரத்தை
சின்ன வயதில் என்னை
'கண்டெடுத்த கனியே' என்று கொஞ்சிய அப்பத்தா
தான்
அதன் தண்டைக் கண்டெடுத்து
நட்டு வைத்தாள் என்று
அம்மம்மா அடிக்கடி சொல்வாள்
பார்த்துப் பார்த்து
தாத்தா கட்டிய வீடு
கோயில் என்றால்
பறவை எச்சமிட்டு
வாசலின் இடதுபுறம்
வளர்ந்து நிற்கும் வேப்பமரம் நந்தவனம்
பாட்டி நட்டு வைத்து
வாசலின் வலதுபுறம்
வளர்ந்து நிற்கும்
லெட்சக் கொட்டக் கீரை மரம்
தலவிருட்சம்.

கா. ந. கல்யாணசுந்தரம்

# கானகத்துச் சிந்தனையில் கனிந்தவை...

காட்டுவழிப் பாதையில்
நல்ல தண்ணீர்க் குளம்
மனிதர் நடமாட்டம் இல்லை

▸

அதிகாலையில் கேட்கிறது
வனத்தில் குயில் பாட்டு
விருதளிக்க வருமா அரசு ?

▸

சிவந்த மண்ணனோடு
குத்தலாகப் பேசி மகிழ்கிறது
காட்டுக்குள் வேர்ப்பலா

▸

வளைந்து நெளிந்து
தேய்ந்த பாதையில் பயணிக்கிறது
அடர்வனத்துத் தனிமை

▸


புல்லாங்குழல் விற்றவனின்
இறுதி ஊர்வலம்
மூங்கில் காட்டுப் பாதையில்

▸

மித வெப்பமுடன்
உயிர்ச்சூழல் உலாவருகிறது
ஊசியிலைக் காடுகள்

▸

எனக்குப் போர்வை வேண்டாம்
இறகுகளையாவது விட்டு வையுங்கள்
அகவும் மயில்




**ராபர்ட் ஃப்ரோஸ்ட்**

**தமிழில்: மு தனஞ்செழியன்**



# தேர்ந்தெடுக்கப்படாத சாலை

*மஞ்சள் காட்டில் பிரிந்த இரண்டு சாலைகள்*
*மன்னியுங்கள் என்னால் இரண்டிலும் பயணிக்க*
*முடியவில்லை*
*ஒரு பயணியாய் நீண்ட நேரம் காத்து இருக்கிறேன்*
*ஒன்றை எட்டிய தூரம் வரை பார்த்தேன்*
*புதர் நிறைந்த வளைவில் பாதை நின்று போனது;*
*இன்னொன்றைத் தேர்ந்தெடுத்தேன் நடுநிலையாக*
*அனேகமாய், அது நல்லதென்றானது*
*ஏனெனில் அந்த புல் படர்ந்த பாதை ஏற்புடையது*
*அங்குக் கடந்து செல்வதை*
*ஏற்றுக்கொண்டாலும் எதார்த்தங்களுடையது*
*மாறுவதில்லை*
*இரண்டு பகலும் சமமாக இடுகின்றன*
*பயணத்தில் சுவடுகள் கருகவில்லை*
*ஓ!, முதல் தொடக்கத்தையே மறுநாளுக்குத்*
*தள்ளிப்போட்டேன்!*
*இப்போது தெரியும் பாதை எப்படி*
*சொல்கிறதென்று.*
*நிச்சயம் திரும்புவேனாயென்று சந்தேகித்தேன்.*
*பெருமூச்சுடன் இதைச் சொல்லுகிறேன்*
*எங்கோ இப்போதிலிருந்து வயதை வயது*
*கடக்கிறது*
*இந்தக் காட்டில் பிரிந்த இரண்டு சாலைகள்*
*நான் பயணங்கள் குறைந்த பாதையைத்*
*தேர்ந்தெடுத்தேன்*
*அது எல்லா மாற்றங்களையும் தொடங்கியது.*

## *The Road Not Taken*

*Robert Frost - 1874-1963*

*Two roads diverged in a yellow wood,*
*And sorry I could not travel both*
*And be one traveler, long I stood*
*And looked down one as far as I could*
*To where it bent in the undergrowth;*
*Then took the other, as just as fair,*
*And having perhaps the better claim,*
*Because it was grassy and wanted wear;*
*Though as for that the passing there*
*Had worn them really about the same,*
*And both that morning equally lay*
*In leaves no step had trodden black.*
*Oh, I kept the first for another day!*
*Yet knowing how way leads on to way,*
*I doubted if I should ever come back.*
*I shall be telling this with a sigh*
*Somewhere ages and ages hence:*
*Two roads diverged in a wood, and I—*
*I took the one less traveled by,*
*And that has made all the difference.*



செ. புனிதஜோதி

## ஆலமரமும் என் சகோதரி

இடம் விட்டு
இன்னொரு இடம்சாரும் ஆலமரம்
பெண்பிள்ளைப் போன்றது
தொப்புள்கொடிக்கும்
தாலிக் கொடிக்குமான
பந்த உறவு போன்றது
வெட்டுப்பட்டு பிரியும் வேளையில்
அழுத ஒப்பாரி
பிறந்த வீட்டு சீர்.
அழுத கண்ணீரைக்
யாரும் கண்டிருக்க வாய்ப்பில்லை
துக்கப்படுவீர்கள் என்பதற்காக
நெஞ்சுக்குழிக்குள்
இருத்தி வாழும்
பெண்ணைப் போன்றது மரம்
கால ஓட்டத்தில்
தனித்து ஊன்றி
செழித்து வளர ஆரம்பித்துவிடும்.
அவளுக்குள் ஊட்டிய தாய்ப்பாலிலும்
இவளுக்குள் ஊட்டிய நீர்ப்பாலிலும்
பிரித்து வெட்டி
எங்கே
வைத்தாலும்
பிறருக்கெனவே
நிழல் கொடுக்கும் போதனைகள்.
ஆனாலும்
அவளுக்குள் கசிவதைப்போல்
இவளுக்குள்ளும் கசியும்
தொப்புள்கொடியின் ஈரம் அவ்வப்போதேனும்.


கோவை, நா. கி. பிரசாத்

## இலக்குகள்

டோக்கனுக்கு கட்டுப்படாத கம்பீரத்தில்
நோயாளிகளோடு அவர்!
மருத்துவருக்கே மருந்துகள் தரும் பெருமிதம்!
சலவை செய்த தூய உடைகளின் மிடுக்கு!
இப்படித்தான் அத்துனை பேரின் பார்வைகளுக்கும்
கவனமீர்க்கப்பட்ட அவர்,
கழுத்து நெறிக்கும்
மாதாந்திர இலக்குகளால் விழுங்கப்பட்டுவிடுகிற
தனது இலக்குகளை போட்டுச்செல்கிறார்
மாதிரி அட்டைகளாய்!

சிங்களத்தில் : விமலதாஸ முதாகே.

தமிழில்: திக்குவல்லை கமால்




# நோயாளிகள்

நெடுங்காலத்திற்கு முன்பு மேலுயர்த்திக் கட்டப்பட்டிருந்த கற்சுவரில் ஆங்காங்கே பாசி படர்ந்திருந்தது. அதனால் மேற்கிளம்பிய ஒருவித நாற்றத்தால் நாசித் துளைகள் கருகிப் போயின. இப்பகுதியில் அனல் கக்கும் வெய்யில் எரித்தபோதும் கற்பரப்பிற்குக் கீழேயுள்ள குகைகளுக்குள் நாள் பூராகவும் ஒளி விழுவதேயில்லை. சாடையாகப் புகுந்துகொள்ளும் சூரியக் கதிர்கள் , சிறைக் கைதிகளின் வாசஸ்தலமான கற்குகைகளின் இருளை விரட்டுவதில் வெற்றி பெறவில்லை. பரங்கியரால் கட்டி எழுப்பப்பட்டுள்ள பெரிய சுற்றுக் கோட்டையினுள் , ஒரு காலத்தில் கடற்படைக் காவலரண் இருந்திருக்கலாம். சுற்றுக் கோட்டையினுள்ளே வெடிமருந்து களஞ்சியப் படுத்துவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த குகை அறைகள் பிற்காலத்தில் சிறைக் கைதிகளின் இருப்பிடங்களாகிவிட்டன.

கல்லையும் மண்ணையும் உருட்டிவிடும் அளவுக்கு சண்டமாருதம் வீசிய இப்பகுதியில் , அடுத்த காலகட்டத்தில் மரத்தளிரொன்றை அசைக்கக்கூடிய அளவுக்குக்கூட காற்று வீசவில்லை. நிலப்பரப்பு முழுநாளும் நெருப்பு மூட்டியதுபோல் தகித்துக்கொண்டிருந்தது. சுண்ணாம்புக் கல்லினாலும் சாந்துக் கலவையாலும் கட்டப்பட்ட கட்டைச் சுவர் , இரவும் பகலும் ஒரேவிதமாக அவர்களைப் பொசுக்கியது. இதனுள்ளே சிறைப்பட்டிருந்த ஒவ்வொருவரும் அதிலிருந்து ஒரு கணப்பொழுதேனும் விடுபடவே எத்தனித்தனர்.

மலசலகூடத்தைத் தவிர்த்தால் , குகைக்குள்ளிருந்து வெளியே செல்லக் கிடைக்கும் சந்தர்ப்பம் மிக அரிது. அந்நாட்களில் என்ன காரணத்துக்காகவென்றாலும்சரி வெளியே வருவது போன்ற நிம்மதி அவர்களுக்கு வேறெதுவும் இருக்கவில்லை. அதனால் பொய் நோயாளிகள் உருவாகிக் கொண்டே இருந்தனர். பொய்நோய் ஏற்படும் அளவுக்கு வெளியே வந்துகொள்ள முடிவதுமில்லை. நோயாளி என்பதை மிகச் சரியாக அதிகாரிகளுக்கு ஒப்புவிக்கத் தெரிந்தவர்கள்கூட போராடித்தான் வெளியே வரவேண்டி இருந்தது. அதுவும் டாக்டர் அனுமதி கொடுக்கும் பட்சத்தில் மாத்திரந்தான்.

ஆரம்ப காலத்தில் பரிச்சயமற்ற சூழல் என்பதால் பலவேறு நோய்கள் ஏற்படவும் விரைவில் பரவவும் வாய்ப்பிருந்தது. கூகைக்கட்டு , கண்நோய் , மூன்றுநாள் காய்ச்சல் , சொரி போன்ற நோய்கள் பெரும்பாலோருக்கு ஏற்பட்டது. தினமும் அல்லது ஒரு நாள் விட்டு மறுநாள் டாக்கர் சுற்றுக் கோட்டைக்கு வருவார் ; அதுவும் இன்னொரு உதவியாளரோடுதான்.



டாக்டரின் துண்டுக்கேற்ப மருந்து கொடுப்பதும் காயங்களுக்கு மருந்திடுவதுமே உதவியாளனின் வேலை. அவன் தனக்கென உருவாக்கிக் கொண்ட கம்பீரத்துடனேயே அதனைச் செயவான். மருந்து தொடர்பான வேலைகளைச் செய்யும்போது அவன்தனது தேசிய உடைக்கு மேலால் இன்னொரு காப்பு உடையை அணிந்து கொள்வான். உடையில் அசிங்கம் படிவதைத் தவிர்ப்பதைவிட , புதிய தோற்றமொன்றை ஏற்படுத்திக் கொள்ளவே அவன் அவ்வாறு செய் தான். உண்மையைச் சொன்னால் அழுக்கை அப்பிக் கொள்ளும் விதமான சிகிச்சை எதுவும் அங்கு நடப்பதே இல்லை. டாக்டர் வந்ததும் நோய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மருந்தெடுக்கும் ஆவல் எல்லோருக்கும் வந்துவிடும். யோசித்துப் பார்த்தால் நோயில்லாதொரு மனிதனைத் தேடிப் பிடிப்பது மிகவும் சிரம்மான காரியம்தான். அந்தளவுக்கு நோய்கள்.

வியர்வையால் தோய்ந்தபடி நோயாளிகள் வந்து சுவர் ஓரமாக வரிசையாக நிற்பார்கள். வரிசைக்கு வெளியே யாராவது நின்றால் , உதவியாளனுக்கு உரத்த தொனியில் பேசுவதற்கு சந்தர்ப்பம் வாய்த்துவிடும்.

“ இங்க வரிசயா நிற்கத் தெரியாதா ஆ ?”

அவர்கள் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் ஏனோதானோவென்று நிற்பார்கள்

‘ பிசாசுகள்... தமிழ்ல சொல்லியும் விளங்க மாட்டேங்குது. சரிவர மாட்

டாங்க ‘

“ ம்... ஒழுங்கா வாங்கடா “

உதவியாளன் மீண்டும் குரலுயர்த்திக் கூறினான். அருகே நின்ற சிறைச்சாலை அலுவலரும் அந்த சத்தத்தால் விழிப்புற்றதுபோல, அவன் பக்கம் சார்ந்து வரிசையை ஒழுங்கு படுத்தினார்.

‘நாங்க யாரென்று இவங்களுக்கு தெரியல்ல. அரசாங்கச்

சம்பளமெடுக்கிறவங்க சிறைக் கைதிகளல்ல. டாக்டருக்கும் அரசாங்கச் சம்பளம்தான். அவருக்கும் எனக்குமுள்ள வித்தியாசம் சம்பளத்தொகை மட்டுந்தான். அவர் என்னவிட கொஞ்சத் கூடப் படித்திருக்கிறார். காற்சட்ட போடுறார். இங்கிலிஷ் பேசுறார். ம்... அவ்வளவுதான் '- உதவியாளனின் நினைவுகள் ஓயவில்லை.

" ஒராள் உள்ள வா "

இரும்புக் கதவு திறந்தது. உள்ளே ஒருவன் புகுந்தான்.

பின்னால் வந்த நோயாளிகள் உதவியாளனின் ஆணைக்கு அடிபணிந்தனர். இல்லாவிட்டால் ஏச்சுப் பேச்சுக்கு எல்லை இருக்காது.

"ஆ. அவ்வளவுதானா ?"

இன்னொருவன் மலகூடப் பக்கமிருந்து ஓடோடிவந்தான்.

" என்ன செய்யிது?"

" வயிற்று வலி "

" மருந்தெடுக்கிறதென்னா நேரத்துக்கு வரணும். இங்க அலஞ்சிகொண்டிருக்க எங்கலால முடியாது. டாக்டர் இன்னும் பல இடங்களுக்கு போகவேண்டி இருக்கு. எனக்கும் ஒன்றா இரண்டா வேலைகள் ! சரிசரி இன்னக்கி மருந்து கொடுத்து முடித்திட்டம். நாளக்கி வா "

" ஐயோ எனக்கு வயிற்று வலி "

" சரி மாலைல மருந்து கொடுக்கிற நேரம் கேளன்.. நானொரு மருந்து தாரன்"

' என்ற பெறுமதி இவங்களுக்கு தெரியுதில்ல. அப்போ காட்டிக் கொள்ளத்தானே வேணும் ! பெறுமதியான மனிதனயும் பெறுமதி இல்லாத மனிதனயும் பிரித்தறியத் தெரியாத ஜென்மங்கள்'

வயிற்று வலிக்காரன் விடுவானா... சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரோடு மீண்டும் வந்தான்.

" இவனுக்கு மருந்தெடுக்கணுமாம் "

" நாளக்கி வரச்சொல்லுங்கொ. "

நோயாளியின் எதிர்பார்ப்பு பூச்சியமாகிவிட்டது. இரும்புக் கதவும் மூடப்பட்டுவிட்டது. உதவுயாளன் டாக்டர் நின்ற பக்கமாகச் சென்றான்.

கோட்டை மதில் இருபத்தைந்தடி அளவு அகலமானது. இந்த சிறைச் சாலையைக் காவல் காக்கும் படைவீரர்களின் காவலரண்களும் அவர்களது தங்குவிடுதிகளும் பாரிய கற்பரப்புக்கு மேலாக உள்ளன. அவற்றில் கூடமைத்துக் கொண்டுள்ள புறாக்கள் பகல் காலத்தில் அங்குமிங்குமாகப் பறந்தகொண்டிருப்பதைக் காணலாம். பறந்து வந்த புறாவொன்று டாக்டரின் தலைக்கு மேலாக அமைந்த வளையில் அமர்ந்து " புர்புர்" என்றது. ஒரு கணம்தான். " சஹக்" என்று புறா எச்சம் டாக்டரின் சேட்டில் விழுந்துவிட்டது.

" இக் "

உதவியாளன் குழம்பிப் போனான்.

" டாக்டரின் சேட்... எடுக்க ஒன்னுமில்ல. அந்தப் புறாவ என்ன செய்த நல்லது !"- என்றவாறு உதவியாளன் பேப்பர் துண்டொன்றைக் கொண்டுவந்தான்.

" இது சரியில்ல "

அடுத்து அவன் பால்நிற ரிசூ கடதாசித் துண்டொன்றைத் தேடிக்கொண்டு வந்தான். டாக்டர் புறா எச்சம் பற்றி ஒன்றும் அலட்டிக் கொள்ளவில்லை. கழுத்தைத் திருப்பி சற்று பார்த்துக் கொண்டது மாத்திரந் தான். தொடர்ந்து கடற்படை அதிகாரியுடன் கதைத்துக் கொண் டிருந்தார்.

இப்பொழுது உதவியாளன் கையில் பஞ்சு , கடதாசி , கத்தரிக்கோல் என்பன இருந்தன. மிகவும் கவனமாக நெருங்கி புண் ஒன்றைச் சுத்தமாக்குவதைவிட

ப் பலமடங்கு கவனமாக ,புறா எச்சம் விழுந்த இடத்தை சுத்தமாக்கினான். மீண்டும் மீண்டும் சுத்தமாக்கி பால்நிறக் கடதாசித் துண்டொன்றில் அவற்றை வைத்து , பின்னர் அதைக் கவனமாகக் கொண்டு சென்றான்.

மாலையில் மருந்தெடுக்க சிறைக் கைதிகள் வந்தனர். படை வீரர்களுக்கு கேட்கும் வண்ணம் உதவியாளன் திட்டித் தீர்த்தான்.

" புண் நனைந்திருக்கே "

" ஐயோ இல்ல"

" ஏனில்லை. இது "

கவனமில்லாமல் தேய்த்ததால் புண்ணிலிருந்து இரத்தம் வெளிப்பட்டது.

" நனைத்துக் கொள்ளக்கூடாது. விளங்குதா "

நாட்பட்ட புண்ணுள்ளவர்கள் உதவியாளனைப் பயத்துடனேயே பார்த்தனர்.

" நேரம் சரி. இன்னும் பத்து நிமிடம்தான். மற்றத் துண்டெல்லாம் நாளைக்கு. ஆ இவங்களுக்கெல்லாம் வருத்தம் ஒன்னுமில்ல. சும்மா சொறிச்சல்தானே... "

எந்த அனுதாபமும் இன்றி இரும்புக் கதவுகள் மூடிக் கொண்டன. கூடத்தினுள்ளே சென்ற சிறைக் கைதிகளுக்கு , சங்கிலியால் கதவைக் கட்டிப் பூட்டிடும் வெறுப்பூட்டும் சத்தம் கேட்காமலில்லை.

# மட்டை வெளிக்கு தாவும் மனசு – எஸ். சிவசேகரன் – மதிப்பீடு

சில கவிதைகள் பொய் சொல்லுகின்றன, வாசகனைத் தவறாக வழி நடத்துகின்றன என்பதற்காக எல்லாக் கவிதைகளும் அப்படித்தான் என்று எண்ணுவது ஏற்புடைத்தன்று.

காலச் சிற்பி செதுக்கும்போது சில கவிதைகள் அதிக சேதாரமாகி உதிர்ந்து... உடைந்து விழுந்துவிடுகின்றன.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் இவரது சில கவிதைகள் காலச் சிற்பியையே சேதாரமாக்கிவிட்டு உறுதியாகி நீடித்து நிற்கும் வல்லமையைப் பெற்றிருக்கின்றன.


சிவசேகரனின் அடிமுடி எனக்குத் தெரியாது. நான் தேடிப்பார்க்கவும் இல்லை. ஆனால் எப்படியோ எனது விலாசத்தைக் கண்டுபிடித்து இவரது கவிதைத் தொகுப்புகள் என்னை வந்து சேர்ந்துள்ளன.

இவரது இளம் வயது... துள்ளும் பருவம் அப்படி என்னத்தை இவர் சாதித்துவிடப் போகின்றார் என்று இவரை மட்டுமல்ல... இவரது படைப்புக்களையும் பதிவுகளையும்கூட நான் தவிர்த்து வந்திருக்கின்றேன்.

இத்தகைய எனது அலட்சியப் போக்கினால் எத்தனையோ இலக்கிய உறவுகளை நான் இழந்திருக்கிறேன் என்பதையும் இவ்வேளை இங்கே பதிவு செய்கின்றேன்.

எனது புத்தகத் தட்டுக்களை தூசு தட்டி மீண்டும் துறை வாரியாக அடுக்கி வைக்குபோது ஒரு புத்தகம் மட்டும் கைநழுவிக் கீழே விழுந்துவிடுகின்றது.

எடுத்துப் பிரித்தபோது... "மட்டை வேலிக்கு தாவும் மனசு" அன்புடன் எஸ். சிவசேகரன் என்றும எழுதியிருந்தார். சரி ஒருமுறை படித்துப் பார்ப்போம் என்றெண்ணி மேசைமீது வைத்துவிட்டேன்.




ஒருசில மணி நேரத்தில் அதனைப் படித்து முடித்துவிட்டேன்... ஆனால் அது எழுப்பிய அலைகள் அடங்குவதற்கு இரவு வெகு நேரமாயிற்று. எனது தூக்கத்தையும் மிகவும் குழப்பிவிட்டிருந்தது.

இதிலுள்ள பிரச்சனை என்னவென்றால்... "கவிஞர்கள்" என்று முண்டாசு கட்டிக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் கவிதையின் வீட்டு விலாசம் தெரியாமல் சந்து, பொந்து, குச்சு ஒழுங்கைகள், குறுக்குத் தெருக்கள்

என்றெல்லாம் தேடிப்பார்த்து விட்டு, வசனத்தை உடைத்துப் போடுவதுதான் கவிதை என்றெண்ணி பல தொகுப்புக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சிவசேகரன் எனும் இந்த இளம் படைப்பாளியோ, கவிதையின் விலாசத்தைச் சரியாகக் கண்டு பிடித்து அதனை நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் பயணம் செய்து கொண்டிருக்கிறார்.

இவர் கவிதைக்கு நெருங்கிய பழக்கமாகிவிட்டார் எனச் சொல்வதிலும் பார்க்க, கவிதை இவருக்கு நெருங்கிய உறவாகிவிட்டது என்பதுதான் மிகப் பொருத்தமானதாகும்.

இவர் கவிதை எழுதுகின்றார் என்பதில் வியப்பில்லை. நல்ல கவிதைகள் இவரைக் கொண்டு எழுதிவித்துக்

கொள்ளுகின்றன என்பதுதான் உண்மை!

பொய் சொல்லாத கவிதைகளும் பொய்த்துப் போகாத உண்மைகளும் இவரது படைப்புகளில் இருப்பதைக் காண முடிகிறது.

வேறொன்றுமல்ல...

சங்க இலக்கியங்கள் தொட்டு இன்றுவரை இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு பழமையான பாடுபொருள்தான். ஆனாலும் கொஞ்சம் நுட்பமாகச் சொல்லுகிறார்.

"விதி செய்த சதியால்
வெள்ளையடிக்கப்பட்ட
வண்ண ஓவியம் அவள்"

இளம் விதவையை மறுமணம் செய்துகொள்ள யாரும் முன்வராத வேளையில் "புறப்பட்டாள் புது வாழ்வு தேடி... " எத்தனயோ கதவுகளைத் தட்டியிருப்பாள், அத்தனை கதவுகளும் அவளை விரட்டியடிக்கின்றன.

இப்போது அவள் தட்டுவதை நிறுத்திவிட்டாள். மாறாக நடுராத்திரியில் அவளது கொல்லைப்புறக் கதவு தட்டப்படுகிறது.

சந்தர்ப்ப சூழ்நிலைகள் தான் ஒரு பெண்ணை தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றன எனக் கூறுவதன் மூலம் ஆசிரியர் மறைமுகமா ஆணாதிக்கச் சிந்தனைக்குச் சாட்டை அடி தருகின்றார்.

ஒரு யதார்த்தமான வாழ்வியலைப் படம் பிடித்துக்காட்டுகிறார்.

"பிள்ளையார் தெருவில்
விற்பனையாகின்றார்
பிள்ளையார்...
விலை
நூறு ரூபாய் மட்டுமே"

பிள்ளையார் தெருவில் வேறு பொருட்களும் விற்பனை செய்யப்படலாம்.

அதனை மறைத்து... பிள்ளையார் தெருவில் பிள்ளையார் மட்டும்தான் விற்பனையாகின்றார் எனக் கூறுவதில் கவித்துவம் இருக்கின்றது, பாராட்டுகிறோம்.

இவரின் கவிதைகள் உண்மை மட்டுமே பேசுகின்றன என்பதனை நான் ஏற்கனவே கூறியிருக்கின்றேன்.

"சிவப்பு மின்மினிப் பூச்சியாய்
அப்பா
அணைத்து அணைத்து
பற்ற வைக்கும் அரை இஞ்சி பீடி... "

ஒரு ஏழைக் குடிசையின் இயல்பு நிலையை மிகவும் எளிமையான சொற்களால் பதிவு செய்கிறார். அற்புதம்.

ஒரு இனத்தின் அடையாளமாக முதலில் மொழி அடுத்து கலை கலாசாரம் பண்பாடுகள் வாழ்க்கை முறைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் இழந்த ஒரு இனமாக நம்தமிழினம் இருக்கக்கூடாது என்பதனை மிகவும் நுட்பமான முறையில் இப்படிப் பதிவு செய்கின்றார்.

"முகவரியில்லாத
எங்கள் வீட்டுக்கு வழிசொல்ல
என்னிடம் இனி
அடையாளம் ஏதுமில்லையே... !

உலகில் எத்தனையோ இனங்கள் விடுதலையை வேண்டி நிற்கின்றன. இன்னும் இன்னும் தொடர்ந்து போராடுகின்றன.

அதற்குரிய விலைகளை மனித உயிர்களாகக் கொடுத்து கொண்டிருக்கின்றன.

அதிகார வர்க்கத்திடம் ஆயுதங்கள் இருக்கின்றன. எனவே அப்பாவிப் பொது மக்கள் எங்கேயும் எவ்வேளையிலும் குறிவைக்கப் படலாம் என்பதனை மண்வாசனையோடு பதிவு செய்கின்றார்.

"நாளையோ
நாளை மறுதினமோ
அந்தச் சத்தம்
மிக அண்மையில் கேட்கலாம்
நானோ அல்லது நீங்களோ
குறிவைக்கப்பட்டிருக்கலாம்
இல்லை குறிக்கப்படலாம்"

இந்தச் சமுதாயம் எப்படி எங்களை நோக்குகின்றது? நாங்கள் எப்படி இந்த சமுதாயத்தைப் பார்க்கின்றோம் என்பதுகூட கொஞ்சம் தட்டி நிமிர்த்தினால் ஒரு முரணான கவிதைதான்.

ஒரு பயித்தியத்தை எப்படி இனம் காண்பது? அடையாளப் படுத்துவது என்பதில் எம்மைக் குழப்பிவிட்டு கவிஞர் தெளிவாக விருக்கின்றார்.

"கூர்மையான பார்வை
வகிடெடுத்து வாரப்பட்ட தலை
சலனம் நிரம்பிய முகம்
எதை வைத்து இவர்கள்
பயித்தியம் என்கிறார்கள்
தர்க்கவியலோடு தர்க்கம் செய்தது
ஆழ்மனம்"

இந்தக் கடவுள் மறுப்புக் கோட்பாடு என்பது

இன்று நேற்றல்ல சோக்ரடீஸ் காலத்திலிருந்தே தொடர்ந்து வருகிறது.

சமத்துவக் கோட்பாடு எப்படி அர்த்தமில்லாது சாத்தியமாகாது போனதுவோ அதேபோலத்தான் இந்தக் கடவுள் மறுப்புக் கோட்பாடுமாகும்.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனோடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

தொல் - பொரு : 571

உயிர்களின் உணர்திறனும் அதன் பாகுபாடும் பற்றிக்கூற வந்த தொல்காப்பியர் ஓரறிவு உயிர் என்பது உடலால் மட்டும் உணர்ந்து அறிவதாகும் என்றும், ஈரறிவு உயிர் என்பது உடம்பினாலும் வாயினாலும் அறிதல் என்றும் மூவறிவு என்பது உடம்பு, வாய், மூக்கு ஆகிய மூன்றினாலும் அறிவது என்றும் நாலறிவு என்பது உடல், வாய், மூக்கு, கண் என்பனவற்றினால் உணரும் உயிர் என்றும் ஐந்தறிவு என்பது உடல், வாய், மூக்கு, கண், செவி என்ற ஐந்து உறுப்புக்களினால் அறிவது என்பதாகும்,

ஆறறிவு என்பது மேற்குறிப்பிட்ட ஐந்தறிவுடன் சேர்ந்து பொருட்களையோ, ஒரு காட்சியினையோ அன்றி தனது உயிரினையோ, ஒரு கருத்தினையோ பகுத்து அறிந்து கொள்வதே அந்த ஆறாவது அறிவு என்றார்.

இதனையே நம்ம ஆளு – கறுப்புச் சட்டைக்காரர் – பகுத்தறிவு என்று தொல்காப்பியர் கூறியதைக், கடவுள் மறுப்புக் கொள்கைதான் அதுவென்று தவறாக அர்த்தப் படுத்திக் கொள்ளுகிறான்.

கவிஞர் சிவசேகரன் தனக்கே உரித்தான கிண்டலோடும் நளினத்தோடும் இவ்வாறு பதிவு செய்கிறார்.

"எதிலுமே இல்லாத உன்னை
எப்படிக் காண்கிறீர்கள்
என்று கேட்டேன்
'நீ ஒரு நாத்திகன்' என்றார்கள்"

போர் கிழித்த தேசம்தான் எங்கள் மண், புயல் கடந்து போனதும்,

கடல் வந்து மீண்டதும் இந்த மண்தான். இவ்வளவு துன்பங்களின் பின்னால் ஒரு சிறு நன்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

கிடுகு ஊறப்போடும் சின்ன குட்டைகள், குளியல் போடும் காகங்கள்,

வழிதவறி வந்த சாரைப்பாம்பு வேலி மட்டைக்குள்ளால் தலையை நீடி வேவு பார்த்தல், அடுத்த தெரு ஆடுகள் மட்டை வேலிக் கருக்கில் முதுகு தேய்த்தல், ஒரு கிழமைக்கு ஒருக்கால் மட்டை வேலி பாய்வேலியாக

மாறும் காட்சி... , இத்தனை வசந்தங்களையும், வாழ்வின் இருத்தல் களையும் நாமிழந்துவிட்டோம்... இல்லை இத்தகைய அழகுகளுக்கு இந்த மண் அந்நியமாகிவிட்டதே என்று இந்த மண்ணின் கவிஞர் மிகவும் ஆதங்கப்படுகின்றார்.

"மட்டை வேலிகளைத் தொலைத்து
எட்ட முடியாத மதில்கள்
எழுப்பிய பின்னும்
தலை துவட்டும் காகங்களையும்
தத்தித் திரியும் புளினிக் குருவிகளையும்
காணும் போதெல்லாம்
மட்டை வேலிக்கு தாவிவிடுகிறது
மனசு"

"மட்டை வேலிக்கு தாவும் மனசு" எனற தலைப்பின் அர்த்தம் இப்போதுதான் புரிகிறது. அருமை! சிறப்பான வாழ்த்துக்கள்!!

"முத்திரைக் கவிதைகள்" என்ற எனது தொகுப்பில் இடம்பெறவிருக்கும் ஒரு குட்டிக் கவிதையை இங்கே இனம் காட்டுகிறேன்.

"............
கிழிந்து போன உடை
நலிந்து போன உடல்
சோகம் அப்பிய முகத்தோடு
கடவுளும்
பிச்சை கேட்கிறார்
தெருவோரங்களில்"

நீங்களும் நானும் மட்டுமல்ல ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகமும் இந்த நிலைக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

புராண இதிகாச கதைகளில் வரும் அடிமுடி தேடிய வரலாற்றில், பொய் சொன்ன பிரம்ம தேவனுக்கு பூலோகத்தில் ஆலயம் அமையாதென்றும், பொய்சாட்சி சொன்ன தாழம்பூ சிவ பூஜைக்கு உதவாது என்றும் சிவன் சாபமிட்டார். இந்த தொன்மத்தை ஒரு முதிர்கன்னிக்கு குறியீடாகக் காட்டுகின்றார். அருமை! அற்புதம்!! பாராட்டுக்கள்!

"சிவனே!

உன் சாபத்தைக்
கொஞ்சக் காலம் தளர்த்த மட்டாயா
பூசைக்குப் போவதற்கு
தவித்துக் கொண்டிருக்கின்றன
பொய் சொல்லாத
தாழம்பூக்கள்”

“இளமையும் நில்லா; யாக்கையும் நில்லா;
வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா;
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்;
மிக்க அறமே விழுத்துணை ஆவது “

இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை ஆகிய நிலையாமைக் கோட்பாடுகளை மணிமேகலை மிகவும் ஆழமாகப் பதிவு செய்கிறது.

கவிஞர் சிவசேகரன் இத்தகைய இளமை நிலையாமை பற்றி பதிவு செய்வதோடு முதியோர் இல்லங்களில் ஞானம் தரும் போதி மரங்கள் தள்ளாடியபடி நின்று நிழல் கொடுக்கின்றனவே என்று ஆதங்கப் படுகின்றார்.

முதியோர் இல்லங்கள் எமது சமூகத்தில் ஒரு சாபக் கேடு என்பதனை மறைமுகமாகச் சொல்லிப் போகிறார்.

“ஞானம் தரும்
போதி மரங்களெல்லாம்
தனிமையில் நின்று தள்ளாடியபடி
நிழல் கொடுக்கின்றன
முதியோர் இல்லங்களில்”

இந்த இளம் கவிஞரின் சமூகத்தின் மீதான கூரிய பார்வையும் ஆழமாகக் கவனத்தில் கொள்ளும் அவதானிப்புகளும் எம்மை ஆச்சரியப் படுத்துகின்றன. வாழ்த்துக்கள்!

இவருக்கு மாலை சூட்டுவதையும் பூக்கள் சொரிவதையும் என்தமிழ் பெரும் பேறாகக் கொள்கின்றது.

இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் தொகுக்கப்பட இருக்கும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு எனும் தொகுப்புக்களில் இவரது கவிதைகளும் இடம்பெறும்.

பொற்கிழியையும் ஆயிரம் பொற்காசுகளையும் இவருக்கே பரிசளிக்குமாறு புலவர் குழாமிற்கு இந்த நீதி மன்றம் பரிந்துரை செய்கின்றது.


இளம்கவியே நின் புலமை கண்டோம்!!

வாழ்த்துக்கள்!!

Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

# அணையாத விளக்கேந்தி...

தொட்டுச் சிலிர்த்துப்
படர்ந்து
பின் முழுவதுமாய் நனைத்துப்
பல சாகசங்கள் புரியும்
உன் நினைவு
மழைத்துளிகளுக்கு
புரவியின் வேகம்
அதன்
குளம்பொலிச்சத்தங்களில்
பட்டாம்பூச்சிகள் படையெடுக்க
இதயமேடையில்
வானவில்லொன்று
சொரூபமெடுத்து
வழி கொடுக்கும்
மௌனந்தாளிட்டுக்
கொண்டாலும்
அந்தரங்க வீதிகளில்
அணையாத விளக்கேந்தி
கனாமொட்டுகளில்
பருவ காலங்களை
உயிர்ப்பிக்கிறாய்
மழைத்துளிகளின் மாயம்
இரவின் கருந்துகள்களிலும் படிந்து
பகலின் சலனப்பகைகளையும்
தவிர்ந்து
காற்றின் தளையறுத்துத்
பிரபஞ்சத்தேன்கூட்டின்
அறைகளெங்கும் முங்கியெழும்பி
முப்பொழுதிலும்
நனைந்தே திளைக்கிறேன்
இயல்பின் நிலை தாண்டித்
தொடரும்
நேசத்தின் நினைவுகள்
விட்டதா என்னை?
இல்லாமலே இருக்கும்
பிடிக்காமல் அடங்கும்
பிடித்தாலும் விடுத்துப்பறக்கும்
பட்டாம்பூச்சிகளாய்!
மிச்சமின்றி
நனைக்கும் மழைத்துளிகளாய்!



ஆரூர். சிவ. மணிவேல்

# சாவு

உடன் அழுகையில் தொடங்கி

அழுது அழுது அலுத்துப்போன அழுகையில் முடியும் ஒரு தவிர்க்க முடியாத வாழ்வியல் நிகழ்வு....

அழுதது போதும்பா முதல்ல தூக்கி வச்சு குளிப்பாட்டுங்க

எனும் முப்பார் சொல் தொடங்கி

வாக்கரிசி போடுறவங்க போட்டுக்கலாம் என சொல்லும் வெட்டியானின் குரலில் முடிவடைகிறது....

பாடைக்கு பச்சமூங்கி ரெண்டு வெட்டி
கடைசியா காடா துணியையும் அவனுக்கு கட்டி
நெத்தி ஒத்த ரூபா ஓட
நாலு பேரு உதவியோட
அவன் பண்ண நல்லதையும் கெட்டதையும்
கரிச்சி கொட்டி
அழுது தீத்து
பொண்டாட்டி புள்ளைய வீட்டுல விட்டு
சாதி சனத்த முச்சந்தில விட்டு
முடிஞ்ச வரைக்கும் ஆம்பளைங்க சேர்த்து அடக்கம் பண்ணா நிகழ்வு முடியும்....
சரக்கு இல்லா சாவு இல்ல
சாவு வந்தாலே சரக்கு தொல்ல
அவ அவன் கணக்கு அவ உனக்கு முடிச்சு வீட்டில வந்த சண்டையை முடிச்சு
வீட்டுக்கு போயி வெறும் திண்ணையில சாய்ஞ்சா
அப்ப தெரியும் சாவு அரும,
நேத்து கடன் என்று கோவிலுக்கு ஓடி ஓடி அலைஞ்சு செஞ்சு
அடையா புண்ணியத்தை அடைஞ்சதா நினைக்கும் நம்ம
ஒரு சாவுக்கு செய்ய யோசிப்பது ஏனோ???

சாவு எல்லோருக்கும் வருவது அதனால் எல்லோரும் எல்லோருக்கும் முடிந்த வரை எதற்கு நிற்கிறோமோ இல்லையோ சாவுக்கு நின்று சிறு அஞ்சலி செலுத்த விட்டு போவோம்.....



**வில்லரசன்**

# வில்லரசன் கவிதைகள்

பூ மலர்கிறது
இன்னும் கண் விழிக்கவில்லை இதழ்கள்
நீரூறிய வேர்கள் தட்டிக்கொடுக்கின்றன
மௌனமாய்
காற்று போர்த்திப்போகிறது
பாராட்டுச்சால்வையொன்றை
புது மலருக்கு
பூ புன்னகைகிறது
நறுமணம் பரவுகிறது
கவிஞர்களின் எழுதுகோல்களை
மைக்குப்பிகள் நிரப்பிக்கொள்கின்றன
விரிந்த இதழ்களில் ஆலிங்கணிக்கும்
வண்டுகளின் தேகத்தில் ஒட்டிக்கொள்கிறது
நறுமணம்
நேரம் கடக்கிறது
களையிழந்து உதிர்கிறது மலர்
வண்டுகளும் காற்றும் கவிஞர்களும் நினைவு
வைத்துகொள்கின்றனர்
மலரின் ஓர் நாளை....

▸

மழைக்காலம்
வழிகளனைத்தையும்
மூடியிருக்கிறது
மழைக்காலப்பேரிருள்..
சகதியில் நெளிந்து
தனக்கான வழியையின்னும்
தேடிக்கொண்டிருக்கின்றன
சிறு நத்தைகள்
திசைகளை தொலைத்த
இரவில் கூகைகளிடும்
கூச்சலில் கரைந்து போகின்றன
மழை பற்றிய கவிதைகள்
எந்த மின்னலும்
இல்லாத நள்ளிரவில்
பறந்து வரும்
சிறு மின்மினியின்
ஒளிச்சிதறல்
உணர்த்தி விடுகிறது
பேரிருளுக்குள்ளும்
வாழ்வுக்கான வழிக்குறிப்பை...




# ஸ்னேஹி எனும் நாய் சிறுகதை நூல் –எனது வாசிப்பனுபவம்

**மௌள**ன ஒத்திகைகள் என்னும் காதல் கவிதை தொகுப்பிற்கு பிறகு சகோதரர் சிவமணி இரண்டாவதாய் எழுதி வெளியிட்டிருக்கும் சிறுகதை நூல் ஸ்னேஹி எனும் நாய். வித்தியாசமான பத்து கதை களங்கள் உள்ள நூல்

மனித உணர்வுகளையும் ,உறவுகளையும் சில கதாபாத்திரங்களின் வழியாக நேர்மையாக ,நேர்பட பேசி இருக்கிறது. ஒரு சில கதைகளில் ஒரு சில குறைகள் இருந்தாலும் வளைகுடா நாட்டில் வேலை செய்து கொண்டு பல பொறுப்புகள் ,கடமைகள் இருந்த போதிலும் இலக்கியத்தின் மீது கொண்ட காதலால் பல சிரமங்களுக்கு இடையிலும் இப்படி பட்ட நல்ல கருத்துக்கள் கொண்ட நூலை வெளியிட்டதற்கே ஆசிரியர் திரு. சிவமணி அவர்களை மனதார பாராட்டுகிறேன்.

எது சிறப்பு என்கிற முதல் சிறுகதையே இந்த புத்தகத்தின் மீது பெரு மதிப்பு வர காரணமாக அமைகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பிரேம் என்னும் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவன் ஆண்டு இறுதி தேர்வில் குறைவாக மதிப்பெண் பெறுகிறான் அவனது தந்தை அதை அவமானமாக எண்ணுகிறார். சுற்றியுள்ளவர்கள் ஏளனமாக எண்ணுவார்களோ என்று எண்ணி வீட்டில் கோபித்து கொண்டு ஒரு பார்க்கிற்கு வருகிறார். ஒரு சிறப்பு பிள்ளை தந்தையின் மூலம் பிரேம் தந்தையின் அறிவு கண்ணை திறப்பது போல கதை முடியும். படி ,அதிக மார்க் எடு ,தோல்வி அடைஞ்சிட்டா நீயெல்லாம் வேஸ்ட்டு என்று கண்ணை கட்டி கொண்டு ஓடும் ஒரு குதிரை போல வாழும் நம்மையெல்லாம் சுந்தரேசனை போல படிக்கும் வாசகனையும் அந்த கதை திருத்தி விட்டு செல்வது தான் அதன் சிறப்பு !

வாயில்லா ஜீவன்களின் மீதும் இவ்வளவு அன்பு வைக்க முடியுமா ,ஸ்னேஹி எனும் அந்த அன்பு கொண்ட நாயை வெளிநாடு கொண்டு செல்ல ஒரு குடும்பம் படும் துயரத்தை ,சிரமத்தை கதை நெடுக பேரன்பால் சொல்லி நிரப்பியிருக்கிறது ஸ்னேஹி எனும் நாய் சிறுகதை.

மரணத்திற்கு பிறகு ஆக கூடிய செலவுகளுக்கும் காப்பீடு இருக்கிறது என்பதை உயில் சிறுகதை பேசுகிறது வாழ்க்கையை பற்றியும் ,வாழ்க்கையில் எல்லோருக்கும் வர கூடிய மரண பயத்தை பற்றியும் சாய் கதாப்பாத்திரம் மூலம் பேசுவதோடு மட்டுமின்றி மரணத்திற்கு பிறகு யாருக்கும் தொந்தரவு செய்யாமல் ,சிரமம் தராமல் தனது சொத்தை யார் ,யாருக்கு எவ்வளவு எழுத வேண்டும் என்பதையும் பிரதான கதாப்பாத்திரம் மூலம் பேசி இறுதியில் இவையெல்லாம் கனவு என பல புதிரான வாழ்க்கை வினாக்களுக்கு விடையளித்திருக்கிறது உயில்.

ராம் ,அன்னம் அவர்களின் அழகான காதல் கதையை கவிதையாய் சொல்லி முடிவில் அன்னம் பிரசவத்தில் இறந்து விட்டாள் என்று அறியும் போது ராமை போல நம் மனமும் கலங்கும் விதத்தில் படைப்பை படைத்திருக்கிறார் நூலாசிரியர்.

இது மும்தாஜ்
வடித்த
தாஜ்மஹால்
ஷாஜகானுக்கு
வேலை
காதலிப்பது மட்டுமே

இப்படி பட்ட அழகான காதல் கவிதைகளும் ராமன்னத்தில் நிறைந்திருக்கிறது.

ராணி மனதுருகி ,வேதனைப்பட்டு சொன்ன சில வாக்குகள் பலித்ததை பதிவு செய்த சிறுகதை வாக்கு. எப்போதும் இன்னொருத்தரின் அடையாளத்தை நாம் சுமக்கக் கூடாது ,அடுத்தவர்களுடைய அடையாளம் ஒருபோதும் நமக்கு ஒத்து வராது. நமக்கான அடையாளத்தை நாம்ம தான் உருவாக்க வேண்டும் போன்ற நல்ல விஷயங்களையும் வாக்கு சிறுகதை பேசுகிறது. சில நேரங்களில் மனதுருகி ,வேதனைப்பட்டு நல்லவர்கள் விடும் சாபம் கூட பலிக்கலாம் என்பதை அறிவியல் கடந்து ஆத்மார்த்தமாய் சொல்கிறது வாக்கு சிறுகதை

கணினி ,அலைபேசி வாயிலாக இணையம் எவ்வளவு வளர்ந்து இருந்தாலும் மரத்தாய் மூலம் உருவான காகிதங்களான புத்தங்கங்களை படிக்கும் சுகம் ஒரு போதும் கிண்டில் கிடைக்காது என்பதை பவித்ரன் என்னும் கதாப்பாத்திரம் மூலம் உணர்வுபூர்வமாய் பேசியிருக்கிறது இந்த கிண்டில்

நினைத்த படி வாழ்க்கை அமையாத ஒரு பெண் படும் கஷ்டத்தையும் ,துயரத்தையும் பேசும் சிறுகதை பஞ்சவர்ணம். சிறப்பு பிள்ளை குமார் மீது பஞ்சவர்ணம் உயிரையே வைத்து இருக்கிறாள் ,அவன் வளர்ந்த பின்பும் கூட அன்பை காட்டி வளர்க்கிறாள். இரண்டாம் மகன் கணேஷை விட குமாரை தான் அவளுக்கு ரொம்ப பிடிக்கும். அதற்க்கு காரணம் அவன் சிறப்பு பிள்ளை. தண்ணின்னா ரொம்ப பிடிக்கும் என் புள்ளைக்கு அதான் சிரிச்ச மனைக்கே இறந்திருக்கான் என்று பஞ்சவர்ணம் புலம்பும் இடங்களில் படிக்கும் வாசகனை நிச்சயம் கலங்க வைப்பாள் இந்த பஞ்சவர்ணம்

தன் தம்பி இறப்பிற்கு பிறகு தம்பி குடும்பத்தை ஒரு தாயை போல ஒரு பெரியப்பா எப்படி பார்த்து கொள்கிறார் என்பதை பேரன்போடு சொல்லி இருக்கிறது இந்த தாயுமானவர். வீட்டிற்கு வருவதற்கு முன்பே தம்பி குழந்தைகளுக்கு இனிப்பு ,பலகாரம் வாங்கி தருவது. தான் காட்டும் அன்பும் ,அக்கறையும் தம்பி குழந்தைகளுக்கு தன் மனைவியாலும் ,குழந்தைகளாலும் சிக்கலை உருவாக்கும் என்பதை அறிந்து மறைமுகமாய் அன்பு செய்து ,அவர்களை நல்லபடியாய் படிக்க வைத்து ஆளாக்குவதெல்லாம் மிகப்பெரிய காரியம். இப்படி பட்ட தாயுள்ளம் கொண்ட பெரியப்பாவிற்கு தான் முழுகாம இருப்பதை தன் தாய்க்கு கூட சொல்லாமல் பெரியப்பாவிற்கு முதன் முதலாய் வர்ஷா சொல்வதாய் கதை முடியும். இந்த தாயுமானவர் பேரன்பின் உச்சம்

அவ ராசியில்லாதவ ,அவன் ராசியில்லாதவன் என்று இன்றும் ஊர்ப்பக்கம் ஒரு சிலதுங்க புறம் பேசிக்கிட்டு தான் நிக்குதுங்க. சில இடங்களில் ராசியில்லாத வீடு கூட உண்டு. அப்படிதான் இந்த சிறுகதையில் வசந்திக்கு ஆரம்பம் முதல் இறுதி வரை வெறும் கெட்டது மட்டுமே நடக்கும். நிழலுக்கு கூட சந்தோசம் அவள் வாழ்வில் எட்டி பார்க்காது. முருகேசன் செத்து வசந்தி விதவையாய் ,ராசியில்லாதவளாய் நிற்பதோடு கதை நிறைவடைகிறது. வசந்தி நிலை யாருக்கும் வந்து விட கூடாது என்று கடவுளிடம் வேண்ட தான் தோன்றுகிறது. ராசி கதையை படிக்கும் போது 1982 ல் வெளிவந்த ராஜிவ் ,மேனகா நடித்த நிரந்தரம் படம் தான் நினைவுக்கு வந்தது ஏனென்றால் அந்த படத்தில் மேனகாவுக்கு கடைசி வரை நிரந்தரம் வெறும் கஷ்டம் மட்டுமே.

ஆயில்யம் என்பது நட்சத்திர வரிசையில் ஒன்பதாவது நட்சத்திரம் ஸ்ரீ ராமபிரான் வனவாசம் புறப்பட்டபோது, உடன் சென்று பணிவிடை செய்வதையே கடமையாகக் கொண்ட லட்சுமணன் பிறந்த நட்சத்திரம் இது. இந்த நட்சத்திரத்தில் பிறந்த ஈஸ்வரி என்னும் ஈஸுக்கு ஜாதகத்தால் திருமணத்தடை இருக்கும். திருமண வரன் தள்ளிக்கொண்டே போகும். நம்ம அவசரத்துக்கு பிள்ளைகளை ஏதோ ஒரு இடத்தில திருமணம் செய்து வைக்க கூடாது. கடவுள் நம்பிக்கையும் ,பொறுமையும் ,பொறுப்புணர்வும் இருந்தால் எல்லாமும் நல்லதாய் நடக்கும் என்பதை பூ விற்கும் வியாபாரி மூலம் பெற்றோர்கள் எல்லோருக்கும் பாடம் நடத்தாமல் புத்தி புகட்டுகிறது இந்த ஆயில்யம்.

என்னை விட வயதிலும் சரி ,அனுபவத்திலும் சரி மூத்தவரான சகோதரர் திரு. சிவமணி கதை களத்தில் எடுக்கும் சிரத்தையை பிழை திருத்தத்திலும் ,கதையை இன்னும் கொஞ்சம் செதுக்குவதிலும் சிரத்தை எடுப்பாரேயானால் இனிவரும் காலங்களில் அவரது படைப்புகள் அனைவராலும் நிச்சயம் கொண்டாடப்படும்.

ஒவ்வொரு சிறுகதைக்கும் பொருத்தமான ஓவியங்கள் வரைந்த /அமைத்த ஓவியருக்கு பாராட்டுக்கள்.

நூல் குறிப்பு : ஸ்னேஹி எனும் நாய்
ஆசிரியர் : திரு. சிவமணி
விலை : 150
வெளியீடு : ஓவியா பதிப்பகம்,
17-13-11 ஸ்ரீராம் காம்ப்ளக்ஸ்
காந்தி நகர் மெயின் ரோடு
வத்தலகுண்டு, திண்டுக்கல் மாவட்டம்

# பாரியன்பன் நாகராஜன் – கவிதைகள்

*தலையில் சுடரைச் சுமக்கும்*
*விளக்குகள் இருளோடு*
*வெளிச்ச உரையாடலைத் தவிர,*
*பிரிதொன்றை நிகழ்த்துவதில்லை.*

▸

*உன்னிடம்*
*ரணங்களை மட்டும்தான்*
*காண்பித்தேன்.*
*இன்னும்*
*வலியை விவரிக்கவில்லை.*

▸

*என் பயணம் நெடுந்தூரம்...*
*வழியில் சந்தித்த ஒருவன்*
*அனுமதி கோராமல்*
*என் பயணத்தில் இணைகிறான்.*
*அவனுக்காகவும் நீள்கிறது*
*என் பயணம்.*

▸

*என்னை மென்று தின்று*
*செரித்து ஏப்பம் எடுத்த*
*உன் பார்வைகள்*
*இன்னும் என்னிடம்*
*எதையோ எதிர்பார்க்கிறது!*

▸

*குடியானவன்*
*வீட்டுப் பிள்ளைகளின் பசி*
*கூழ்க்காய்ச்சிக் காய்ந்த*
*காலிப்பானையைக் கண்களால்*
*துழாவி நாவால் ருசிக்கும்.*

▸

*தினந்தினம் அழுதவள்*
*இன்று மொத்தமாய்*
*அழுது தீர்க்கிறாள்.*

*மடிந்த குடிகாரக் கணவன்*
*நாளைச் சவமாய்க் கூட இல்லாமல்*
*இருக்கப் போ"வதை"எண்ணி... !*

▸

*முதியோர்*
*இருக்கும் வீட்டில்*
*இல்லை முட்டாள்.*

▸

*என் கருணை வார்த்தைகள்*
*உன் பசி தீர்க்கப் போவதில்லை*
*அது சட்டைப்பையை*
*நிரப்பப் போவதுமில்லை.*
*உன் நெஞ்சுக்கு நிச்சயம்*
*நிம்மதி தரும்.*

▸

*கிளையில் ஆர்ப்பாட்டமின்றி*
*அமர்ந்திருக்கும் பறவையின்*
*அமைதியை ஆதரியுங்கள்*
*அது றெக்கைகளின்*
*வலியாகவுமிருக்கலாம்.*

▸

*ரத்தசோகையால்*
*கடவுளின் நாமமென*
*உன் பெயரை ஜெபிக்கிறேன்*
*10 கிராமிலிருந்து*
*12 கிராமிற்கு கூடியது*
*என் குருதியளவு... !*

▸

*அப்பிக் கிடக்கிறது*
*நேற்றைய தூறலில்*
*மண்ணில் பசுமை.*



ஹெர்மன் ஹஸ்ஸி–

மொழிபெயர்ப்பு –பேராசிரியர் மு விஜயகுமார்

## எவ்வளவு கடினமான நாட்கள்

எவ்வளவு கடினமாக நாட்கள்
நெருப்பின் கதகதப்பு உணரவில்லை
சூரியன் என்னுடன் சிரித்து சிலாய்கவில்லை
எங்கும் வெறுமை.
எங்கும் குளிரும், இரக்கமற்ற சூழலும் என் காதலி கூட
ஒளி உமிழும் நட்சத்திரமோ
கலையிழந்து கீழே தொங்கியது
இவையனைத்தும் உணர்ந்தேன்
என் இதயத்தில் காதல் இறந்ததிலிருந்து.

## *die gedichte- Hesse poems 1970).*

*How Heavy The Days*
*How heavy the days are.*
*There's not a fire that can warm me,*
*Not a sun to laugh with me,*
*Everything bare,*
*Everything cold and merciless,*
*And even the beloved, clear*
*Stars look desolately down,*
*Since I learned in my heart that*
*Love can die.*



# போய் வா கணவா பொழுதோட...

**வா**டி ஒரு எட்டு போயிட்டு வருவோம் அப்படியே கல்லு மாதிரி நீயும் உட்கார்ந்து மாவு அரைச்சுக்கிட்டு இருக்க. என்னதான் இருந்தாலும் உறவும் உரிமையும் இல்லாம போகுமா. ஆட்டுக்கல்லில் மாவரைத்து கொண்டு இருந்த ரேணுகாதேவி. மாலதி அக்காவின் பேச்சை கேட்காது போல இன்னும் கவனமாக வேகமாக மாவரைத்துக்கொண்டிருந்தாள். அவள் கண்கள் ஒளிர்ந்தன. விட்டு விட்டு கேட்கும் குயிலின் ஓசை போல அவள் மனதும் விட்டுவிட்டு மூச்சு வாங்கியது.

நேரம் ஆக ஆக அவள் வீட்டு முன் பல சொந்தக்காரர்கள் வந்து கூடினர் எல்லோரும் ரேணுகா தேவியை பார்த்துக் கொண்டே இருந்தனர் அவள் சற்றும் மனம் தளராமல் மனதில் சிறு அசைவு கூட இல்லாமல் அவரளுடைய அன்றாட வேலைகளை பார்த்துக் கொண்டிருந்தாள்சுந்தரி அக்கா ஜமுனா அத்தை எல்லோரும் அவள் நடவடிக்கையின் மேல் கோபம் கொண்டு ஆயிரம் இருந்தாலும் அவன் உனக்கு தாலி கட்டின புருஷன் இன்னைக்கு மண்ணோடு மண்ணாக செத்துக் கிடக்கான்தூக்கமுன்னாடிபாத்ட்டு வந்தரலாம் அந்த ஜென்மம் மோட்சம் அடையட்டும்.

ஒருவேளை சொர்க்கத்துக்கு போகையில உன்னை பார்க்கவில்லை ண்ணு கொரை இல்லாமல் அது ஆவியா அலையுதோ என்னமோ என்று ஜமுனாத்தை சொன்ன போது இவளுக்கு சிரிப்பதா அழுவதா கோபப்படுவதா எனத் தெரியவில்லை. அவள் எதற்கும் கவலைப்படாமல் தனது ஹோட்டலை திறக்க எத்தனித் தாள். காயம் பட்டு காயம் பட்டு கல்லாய் போன களிம்பெறிய மனது எதையும் சிந்தை செயலுக்குள் கொண்டு செல்லும் நிலையில் இல்லை.

காட்சி கண்ணன் இருந்த திசையை கூட பார்ப்பதற்கு அவளுக்கு உடன்பாடு இல்லை எவ்வளவு ஆசையோடும் எவ்வளவு அன்போடும் பரிவோடும் குடும்பம் நடத்தி இருப்பாள். மரம் போல மிகப்பெரிய இட்லி சட்டி எடுத்து வைத்து இட்லி ஊத்திவைத்து சட்னி வகைகளை வாளியில் மாற்றி வைத்து வேலைகளைத் தொடங்கி விட்டாள்.

மகன் தினேஷ் தான் கொல்லிப் போடணும் அதுல எதுவும் சொல்லிடாத ஆத்தா 12 படிக்கிறியான் இன்னைக்கு பரீட்சை எழுதி வரட்டும் அவனை நான் கூட்டி போயிட்டு வந்துடறேன் என அண்ணன் ராசு சொன்ன பொழுது அதையும் காதில் வாங்காத மாதிரி வேலை செய்து கொண்டே இருந்தாள். தினேஷ் அரையாண்டு தேர்வு பரிட்சை எழுதி முடித்து வந்த பின்பு வீட்டின் வாசலில் இவ்வளவு பேர் கூட்டமாய் இருப்பதை பார்த்து ஆச்சரியப்பட்டு போனான் ஜமுனாத்தையும் செல்லாக்காவும் அவனை கட்டிப் பிடித்து கதறி அழுதார்கள்..

அப்பா தினேஷ் உங்க அப்பன் உன்னைய விட்டுட்டு போய்ட்டான அப்பா. அழகுபெத்த பிள்ளைய அனாதையா விட்டுட்டு போய்ட்டானப்பாநட்டாத்துலஉங்கள எல்லாம் விட்டுட்டு போக எப்படித்தான் அவனுக்கு மனசு வந்துச்சோ கொஞ்சமாவது நெஞ்சில் ஈரமில்லாம இப்படி போய் சேர்ந்துட்டான். அவர்கள் மார்பிலும் தலையிலும் அடித்துக் கொண்டு வருவதை இவளால் காண சகிக்கலை அப்படியே நீங்கள் பார்க்கலாம் உங்கள் விருப்பம் போல் அங்கே போய் அழுகலாம் இங்கு

எதுக்கு புலம்புறீங்க சரிதான் அதுக்கு என்ன பண்ண முடியும் ஆனதுஆய் போச்சு ஆயிரம் தான் இருந்தாலும் ஒரு மனுஷன் இறந்து போன பிறகு சாமிக்கு சமம் என்று சொல்வாங்கஇப்படி எல்லாம் வீராப்பு வீம்புமாஇருந்தா சரி இல்ல. உங்க அண்ணன் மட்டும் எப்படி சூழ்நிலையை புரிஞ்சுகிட்டு அதுக்கு ஏத்த மாதிரி உன் மகனை கூட்டிட்டு போக ஆசைப்படுறான்.

அதுவரை அமைதியாக இருந்த வீராயி கூந்தலை அள்ளி முடிந்து புடவையை தூக்கி சொருகி சண்டை போடுவது போல் பேசத் தொடங்கினாள் உங்களுக்கு என்ன வாய் புழிசுச்சா மாங்காய் புளிச்சதா என்று பேசிட்டு போவீங்க.

அவபட்ட கஷ்டம் யாருக்கு புரியும் அவ அண்ணங்காரன் இன்னைக்கு கூட்டிட்டு போக தயாராக இருக்காண்ணா சொத்தஎழுதி வைத்திருக்கிறானே அதுக்கு காரணம் இருக்கு. சும்மா இல்ல தன் பிள்ளையை தான் வளர்த்த மருமகனுக்கே கட்டிக் கொடுக்க ஆசைப்படுறேன்.

இவன் போய் கொல்லி வச்சாத்தான் அங்க இவன் அப்பன் இவன் பேர்ல எழுதி வச்ச 10 சென்ட் நிலம் இவனுக்கு கிடைக்கும் இல்லாட்டி அத அவங்க பங்காளிகாரங்களேஆட்டைய போட்டுருவாங்க. அவங்க அப்பன் கடைசியாக இருந்த வீட்டிலேயே இவனுக்கு பங்கு கிடைக்காமல் செஞ்சுருவாங்க கூட பிறந்தவனே அதேன் அவங்க பெரியப்பா வே ஆட்டைய போட தயாராக இருக்கான்அதனால தான் கொல்லி வச்சிட்டா நாளைக்கு பஞ்சாயத்து பேசும்போது கொல்லி வச்சிருக்கத சொல்லி சொத்தை தட்டி போடலாம்ல அதுக்கு தான் அவங்க அண்ணே ஆர்வமா இருக்கும்.

அப்படியே அவங்க அண்ணன் வேணா மனுசன மதிக்காம காசு பணத்தை மதிச்சு இருக்கலாம் ஆனால் இருக்கும்போது ஒரு மனுஷியா கண்டுக்காம நோக வச்சுட்டு அவ பேச்ச கேக்காம இருந்த அவுங்க அப்பன இவன் போய் பார்க்கத்தான் வேணுமா உங்களுக்கு என்ன ஒரு நாள் பேசிட்டு அடுத்த இழவுக்கு போயிடுவீங்க ஆனா அவ வாழ்ந்த வாழ்க்கையை அவ கண்ட கணவ உங்களால திருப்பி கொடுக்க முடியுமா போவீங்களா உங்க வேலைய ப்பாத்துட்டு என வீராயி முழங்கியது. அந்தத் தெருமுழுவதும் கேட்டது. இவ்வளவு சத்தமாக உயிராபேசியபோதும் கூட எதுவும் நடக்காது போலமாமா கூட கிளம்ப ஆயத்தமாய் இருந்த தினேஷை கூப்பிட்டு தட்டு நிறைய இட்லி போட்டு சாப்பிட வைத்து அனுப்பினாள்

ஒரு சின்ன மினி லாரியில் ஒரு பெருங்கூட்டம் கிளம்பஆயத்தமானது தப்புக்குண்டு என்ற ஊருக்கு இங்கிருந்து சொந்த பந்தங்கள் லாரி ஏறிக்கொண்டு போய்க்கொண்டிருப்பதை ரேணுகாதேவி பார்த்துக்

கொண்டிருந்தாள்.

இரவின் நிசப்தத்தை அங்கு கேட்ட சோகப்பாடல் கிழித்து கொண்டிருந்தது. உசிலம்பட்டி கனகா கரகாட்ட குழுவினர் எங்கு இழவு நடந்தாலும் சோகத்தை பிழிந்து அவர்கள் பாடுகிற பாடல் கல்லையும் கரைக்கும் தினேஷுக்கு புதுமையாக இருந்தது அவன் பிறந்ததிலிருந்து அந்த ஊருக்கு வந்ததில்லை அங்குள்ள மக்களை ப்பார்த்ததில்லை அந்த நிலைமை அவனுக்கு புதிதாக இருந்ததுஇறந்து போன அப்பன் முகத்தை பார்த்துக் கொண்டே இருந்தான்ஒரு சாயலின் இவனை போல தான் அவன் இருந்தான். எவ்வளவுதான் வறுமையில் வாழ்ந்தாலும்

பல்வேறு வேலைகள் செய்தாலும் தன் மகனுக்காக அவன் சேர்த்து வைத்த சொத்தை பத்திஎல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அந்த வீட்டுக்குள் அவன் நுழைந்ததும் அவன் அப்பத்தா இருளாயி இவனை கட்டிக்கொண்டு அழுதது அவனுக்கு என்னவோ போல் இருந்தது வெளியில் பூ அலங்காரத்தோடு தாயாராக இருந்தது பெரிய பாடை.

ஒல்லியான உருவமைப்போடு கீழே படுக்க வைத்து இருந்தான் காட்சி கண்ணன். பெரியப்பன் இவனைப் பார்த்ததும் நகத்தைக் கடித்துக் கொண்டே இருந்தான். அங்கு இருந்த சொந்த பந்தங்கள் பெரிய மாயன் ராசுகாட்சி கண்ணனின் நண்பர்கள் எல்லோரும் கூட மாடசூழ்ந்து இறுதி கட்ட காரியங்களை செய்ய தொடங்கினார்.

இருளாயிஅப்பத்தா சுயநலவு இல்லாமல் அப்பப்ப மயக்கம் போட்டு எழுந்தது. இந்த கிழவியோட குடிப்பழக்கம் தான் மகனையும் பலியாகிவிட்டது என்று எல்லாரும் அரசல் புரசலாக சொல்லுவாங்க. பேசிக் கொண்டார்கள். கிழவியோட போதாத இந்த குடி பழக்கம் தன் மகன் மருமகள் பேரப்பிள்ளை என்று நன்றாக வாழ வேண்டிய குடும்ப இன்னிக்கு நாசமா போக காரணம் நட்டாத்துல நிக்குது எல்லாத்துக்கும் இந்த சூனியக்கார கிழவி தான் காரணம் என்று ஒரு பேச்சு போய்க கொண்டிருந்தது..

பொதுவாக புதைப்பது தான் அவர்கள் வழக்கம் ஆனால் இவன் ஆஸ்பத்திரியில் நீண்ட காலம் இருந்த காரணத்தினால் கல்லீரல் பழுதாகி குணப்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு ஒரு மாத காலம் படுத்த இந்த



காரணத்தினால் அவனை எரிக்கத்தான் வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லி முடிவெடுத்தார்கள்.

அவசரகதியில் அத்தனை சடங்குகளும் நடந்தேறின இரவோடு இரவாக அவன் உடல் இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு எரியூட்டப்பட்டது..

அவசரகதிகளசில சடங்குகள் மற்றும் பின்பற்றப்பட்டன பல சடங்குகள் பின்பற்றப்படவில்லை அதுவுமே ஊரில் சிலரின் பேச்சுக்கு காரணமாக இருந்தது.

ரேணுகா உன்னை தப்புக்குண்டில் இருந்து பொண்ணு பாக்க வந்திருக்காங்க சட்டுபுட்டுன்னு சேலையை மாத்திட்டு வந்து நில்லுத்தா அதிகம் வாய் பேசாத உலகமே அறியாத ரேணுகா. பதினோராம் வகுப்பில் இன்னும் முடிக்கவில்லை ஆனால் ஓங்குதாங்க வளர்ந்து இருந்தாள். இருளாயி.

காட்சி கண்ணன் பெரியவன் லட்சுமணன் அவன் சம்சாரம் என்ற ஒரு பத்து பேருக்கு மேல் அந்த பொண்ணு பார்க்க வந்திருந்தார்கள். அந்த ஊருக்கு பண்ணைப்புறம் அருகில் இருக்கும் அழகான புலிக்குத்தி என்ற கிராமத்திற்குவந்திருந்தார்கள். வந்த பொழுது அங்கே சாராய நெடி அடித்தது இருளாயி குடுத்திருப்பது யாருக்கும் தெரியாது.

இருளாயியின் கணவன் மாயன் இறந்த பொழுது அவன் விட்டு சென்ற கடையை பராமரித்து பிள்ளைகளை ஆளாக்கும்போது அவன் விட்டு சென்ற பழக்கமான சாராயம் குடிக்கும் பழக்கமும் பழகி விட்டாள் இருளாயி மூத்தவன் லட்சுமணன் பலமுறை கண்டித்து இருக்கிறான் ஆனால் இளையவன் காட்சி கண்ணன்

அம்மாவுக்கு வாங்கி வருவது போல அவனும் அடித்து பழகி இருக்கிறான். இப்படி ஒரு குடிகார குடும்பத்திற்கு வாக்கப்பட போறோம் என்று இந்த பச்சை மண்ணு ரேணுகாதேவிக்கு தெரியாது. 11-ம் வகுப்பில் தேர்ச்சி அடைந்து மேற்கொண்டு படித்து அந்த ஊரில் டீச்சராக வேண்டும் என்பதுதான் அவளுடைய ஆசை. யாரிடமும் அதிகம் பேசாமல் உலகம் தெரியாத பிள்ளையாக வளர்ந்தவள் தான் உண்டு பள்ளிக்கூடம் உண்டு வீடு உண்டு படிப்பு உண்டு என்று இருந்தவள்.

பெரியவர்களாக பார்த்து ஏதேதோ பேசி முடித்து திருமணம் என்று சொன்னார்கள் அவள் அழுதது அன்று இரவு மழையாக பொழிந்தது ஊரே இருண்டது மின்சாரம் தடைபட்ட நாளில் தான் அவள் திருமணம் முடித்து அந்த ஊருக்குள் நுழைந்தாள்.

ஒரே புயல் மழை காற்றும் இருட்டும் வானம் கருத்து அவளின் அவல நிலையை பறை சாற்றுவது போல இருந்தது. ரேணுகாதேவி காட்சி கண்ணனை கூட பார்க்காமல் அவனுக்கு மனைவியாக ஆக்கப்பட்டு அந்த தப்புகுண்டு ஊருக்கு வந்தாள்.

ஆரம்பத்தில் அவன் அன்பாகத்தான் இருந்தான். ஆட்டோ ஓட்டுவது சமையல் வேலைக்கு செல்வது என்று கிடைத்த வேலையெல்லாம் செய்தான். காட்சி கண்ணனுக்கு நண்பர்கள் அதிகம் யார் வந்து கூப்பிட்டாலும் எப்பொழுதும் கூப்பிட்டாலும் எங்கு கூப்பிட்டாலும் எதற்காக கூப்பிட்டாலும் எதையும் யோசிக்காமல் அவர்கள் பின்னால் சென்று அவர்கள் சொல்லும் வேலையை முடித்துஅது குடியில் வந்து முடியும். நாள்தோறும் குடித்துவிட்டு வருவது வாடிக்கையானது. முதலில் சிணுங்கினாள்அழுதாள் பிறகு துடித்தாள்.

கணவன் குடிகாரன் மாமியார் கொடுமைக்காரி பிறந்த வீட்டில் வழி இல்லை கூட பிறந்த அண்ணன் சொத்தை மட்டும் பார்த்து தங்கச்சியை கழட்டி விட நினைக்கிறான். ஒரு கட்டத்தில் வாழ்க்கையை வெறுத்து கிணற்றில் விழுந்து விடலாமா மருந்து அடிக்கலாமா அல்லது தூக்கு போட்டு தொங்கலாமா எதைச் செய்தாவது மாய்த்துக் கொள்ள வேண்டும் என எண்ணியிருந்தபொழுது

அவளைப் பார்ப்பதற்கு வீராயிவந்தாள் ஏன் இப்படி ஒரு மாதிரி இருக்க உன்னை இப்படி ஒரு நாளும் பார்த்ததில்லையே உலகம் தெரியாத ஒரு பிள்ளையை இப்படி போய் கல்யாணம் என்ற பெயரில் வம்புல மாட்டி விட்டார்களே என்று வேதனையை கொட்டினாள் நீ எதுக்கும் கவலைப் படாத கடவுள் இருக்காரு மனச விட்டுவிடாத என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது ரேணுகாதேவி வாந்தி எடுத்தாள்.

ரேணுகாதேவி மாசமானது உறுதியானது அப்போது அவளுக்குள் ஏற்பட்ட அதிர்வலைகள் ஒரு நம்பிக்கை தந்தது வேறு ஒரு உலகத்தில் அவளை சஞ்சரிக்க வைத்தது மற்றும் ஒரு பரிமாணத்தில் வாழ்க்கை நகர்த்ததற்கான நம்பிக்கையை அந்த செய்தியை உறுதி அளித்தது. வீராயி சொல்வதைக் கேட்டு எப்படியாவது அன்பால் அவனைத் திருத்தலாம் என்ற நம்பிக்கையில் நல்ல உறுதியாயிற்று திருமணத்திற்கு பின்பு அதிகமாக பேசாத ரேணுகா தேவி காட்சி கண்ணன் இடம்பிரியமாக பேச தொடங்கினாள்.

அவனும் நல்லபடியாக தொழிலை பார்த்து தந்தை வைத்திருந்த பழைய பாத்திரங்களை எல்லாம் ரிப்பேர் செய்து புதிதாக ஓட்டல் தொடங்கி நல்லபடியாக வியாபாரம் பார்த்தான்.

வேறு காலத்திற்கு இவள் அம்மா வீட்டுக்கு சென்று வந்த காலத்தில் மீண்டும் பழையபடி பழைய கிழவிகதவ திறடிஎன்ற மாதிரி

மீண்டும் வேதாளம் முருங்கை மரத்துக்கு ஏறியது எல்லாம் இருளாயிகிழவியின் கைங்கரியம் என்று நினைத்துக் கொண்டாள்.

குழந்தை பிறந்து இரண்டு மாதம் கழித்து மீண்டும் வீட்டுக்கு போனபோது அவன் உச்ச போதையில் நாள்தோறும் வந்து வம்பு இழுத்துக் கொண்டு இருந்தான்.

வேப்பம்பட்டி பெரிய பஞ்சாயத்துக்கு ஆளுகள் எல்லாம் வரவழைக்க சொல்லி பெரிய பஞ்சாயத்து கூட்ட வேண்டும் என்று நினைத்து ஒரு முடிவு எடுத்தவளாக ரேணுகா தேவி பஞ்சாயத்திற்கு எல்லோரையும் அழைத்தாள். ரேணுகா தேவி வாக்கப்பட்டபோது வந்த அத்தனை பெரிய மக்களும் அங்கே வந்திருந்தார்கள் பொண்ணு வீட்டுக்காரங்க ஒரு பக்கம் மாப்பிள்ளை காட்சி கண்ணு வீட்டுக்காரங்க இன்னொரு பக்கம்.

பெரிய கிடாமீசை வைத்திருந்த பெரியவர் தான் தொடங்கினார்.

அம்மா ரேணுகா உன் மனசுல பட்டதெல்லாம் சொல்லுமா என்ன நினைக்கிறியோ அது தெளிவா சொல்லு வழிமறை இல்லாமல் புரியிற மாதிரி சொல்லுமா.

அவள் பேசப் போவதை பார்த்து எல்லோருக்கும் ஆச்சரியம் இவளா இங்கு பேசப்போகிறாள். குரல் வருமா பேச தெரியுமா என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டு நின்ன பொழுது. ஐயா பெரியவங்கள கும்பிட்டுக்கொள்கிறேன் எனக்கு அதிகமா படிக்கவைக்கல. இந்த மனுசன நம்பி நான் வாக்கப்பட்டு இந்த ஊருக்கு வந்தேன் ஆனால் நல்ல மனுஷன் தான் எனக்குஎதுவும் குற்றம் வர வைக்கல எந்த விதமான தொந்தரவு இம்மிஷ கொடுக்கல ஆனா எங்க மாமியார் காரி குடிப்பா அவ குடிக்கு ஏதோ ராத்திரி ராத்திரி யாருக்கும் தெரியாம வாங்கி வந்து வீட்டுக்குள்ளே குடிக்கிறா அவ குடிச்சு குடிச்சு பழகிவிட்டு என் புருஷன் காரனையும் பழக்கி விட்டா

ஒழுக்கமா வேலைக்கு போய் நாலு காசு சம்பாதிச்சு குடும்பத்தை பாக்காம இப்படி ஆத்தாளுக்கு பாதி வாங்கி கொடுத்து இவர் பாதி ஊத்திக்கிட்டு சொத்த பூரா அழிச்சிடுவாருன்னு பயமா இருக்கு எங்களுக்கு இவர் மேல நம்பிக்கை இல்லை.

எங்களுக்குன்னு ஒரு ஆம்பள புள்ள பொறந்து இருக்கு இனிமே அத பாக்கணும் குடும்பத்தை பாக்கணும் நல்லபடியா வாழனும் ஒரே பேச்சு.

சாராயமா சம்சாரமா முடிவு என்னன்னு நீங்களே கேட்டு சொல்லுங்க குடும்பம் நடத்தணும்னா இந்த ஆள குடிக்கிறதை நிப்பாட்ட சொல்லுங்க.

இப்படி ஊர் முன்னாடி அவ பேசினது இவங்களுக்கெல்லாம் பெரிய மரியாதை குறைவா போச்சு காட்சி கண்ணன் வம்பு பிடித்தவனாக ஆத்தாளின் பேச்சு கேட்டுக் கொண்டு என்னால குடிக்கிறது நிப்பாட்ட முடியாது நான் குடிச்சுக்குவேன் பொண்டாட்டியும் பாத்துக்குவேன். சம்மதம்னா சொல்லுங்க குடும்பம் நடத்துறேன் இல்லனா அத்து உடுங்க என்று நா கூசாம பேசினான் காட்சி கண்ணன்.

அன்று அவன் பேசிய வார்த்தை ஒன்றும் இடியாக அவள் மனதில் இறங்கியது என் மேல் காதல் இல்லை என் மேல் ஆசை இல்லை என் உடன் வாழ அவருக்கு விருப்பமில்லை சாராயம் தான் முக்கியம் என சொன்ன அந்த மனிதனை திரும்பி கூட அவள் பார்க்க விரும்பவில்லை.

ஒன்றும் தெரியாத பெண்ணாக இருந்தவளுக்கு உலகம் புரிய தொடங்கியது கையில் மகனைப் பிடித்துக் கொண்டு தன் ஊருக்கே சென்று விட்டாள் அது முதல் அவனைப் பற்றி அவள் நினைக்கவே இல்லை.

அண்ணன் ராசுவின் வற்புறுத்தின் காரணமாக இரண்டாம் தரமாக ஒருத்தனுக்கு வாக்கப்பட்டாள் அவனும். இவள் போட்டு இருந்த நகைக்காக ஆசைப்பட்டு முடிந்தவரை அவள் இளமையை அனுபவித்து விட்டு அவளை விரட்டி விட்டான்.

ஒட்டுமொத்தமாக எல்லா ஆண்களையும் வெறுத்துவிட்டு தன் ஊருக்கே வந்து கடை தொடங்கி பிள்ளையை 12 வரைக்கும் படிக்க வைத்து விட்டாள்.

இடையில் பலமுறை யார் யார் மூலமாகவோ காட்சி கண்ணன் இவளை பார்க்கவும் சமாதானம் பேசவும் பலமுறை முயற்சித்தான் அது ஒன்றுமே படிக்கவில்லை கிழவி இருக்கும் வரை நம் வாழ்க்கை சரியாக வராது அவர்கள் ஒரு வேலை இறந்துவிட்டால் பார்க்கலாம் என்று நினைத்திருந்தாள் ஆனால் கடைசி வரைக்கும் கிழவி குடியும் கொடுத்தனமாக தன் மகனையும் கெடுத்து சீரழித்துக் கொண்டிருந்தாள்

காட்சி கண்ணன் மீது இருந்த கோபத்தை விட அவன் ஊர் மீது இருந்த கோபத்தை விட அவன் இருந்த திசை மீது அவளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

கொஞ்சமும் விவரம் தெரியாத வயதில் தன் காதலை எல்லாம் அவன் மதிக்கவில்லை அவன் குடியடிமையாகி விட்டான் என்பதை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மொட்டை அடித்து சடங்கு முடித்து வந்த தன் மகனை கட்டிக்கொண்டாள். அதுவரை அம்மாவின் முகத்தை கூர்ந்து பார்க்காத மகன் தினேஷ் அவளை அன்புடன் பார்த்தான்.. காட்சி கண்ணனுக்கு நடந்த இறுதி ஊர்வலத்தை பற்றியும் அப்பாவின் முகத்தை பற்றியும் அந்த ஊரை பற்றியும் விரிவாக அம்மாவிற்கு எடுத்துச் சொன்னான். அப்பனை படுகுழியில் தள்ளிய இருளாயி அப்பத்தாளப்பொழுதும் அதேபோலத்தான் அங்கே போவோர் வருவோரை பார்த்து குடிக்க காசு கேட்டு குடிப்பதற்கு சரக்கு வாங்கி வரச் சொல்லி பேசுவதையும் தினேஷ் மறைக்காமல் அம்மாவிடம் சொன்னான்அவள் மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் போய்வா கனவா பொழுதோட....


## முந்தைய இதழ்கள்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022



சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்